1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்கரவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 7-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 39-ம் இலக்சம்

# மரியாயின் சமாகம விசேஷ இதழ்

## குடும்பங்களைப் பாதுகாக்கும் குடும்பசெபமாலை

குடும்பசெபங்களில் செபமாலைத்தியானம் அதிபூரணமானது. வேதாகமம் செபமாலை செபிக்க வேண்டுமெனக் கற்பிப்பதில்லை. ஆயினும் அது செபமாலைச்செபங்களைப் படிப்பிக்கின்றது. கிறீஸ்துநாதர் தாமே வெளிப்படுத்திய திரித்துவபரம இரகசியத்துக்கு யோக்கியவணக்கமாகும பரமதிரித்துவதோத்திரம், — இது ஆதிக்கிறீஸ்துவர்களால் அநுட்டிக்கப்பட்ட அருமையானவழக்கம் — நமதுஇரட்சாபெருமான் அப்போஸ்தலருக்குப் படிப்பித்தசெபங்களில் அதிஉத்தம செபமாகும் பரமண்டலமந்திரம், தேவதூதன் பரிசுத்த கன்னிமரியம்மாளுக்கு வாழ்த்துதலாகச் சொன்ன மங்கள ஸ்துதி, அர்ச். எலிசபெத்தம்மாள் தேவதாயைஉபசரித்து வரவேற்றவாழ்த்து, பாவப்பிணிபிடித்த பரதேசிகளாகும் எங்கள்விண்ணப்பம் ஆகிய இவைகள்தான் செபமாலைத்தியானத்தில் அடங்கியசெபங்கள்.

இச்செபத்தின் மதிப்பும், பலிதமும் எதனால்உண்டாயது? திரும்பத்திரும்ப உச்சாரணம் செய்வதினலா? இல்லை. இச்செபத்தில் அடங்கியுள்ள மந்திரங்கள் அத்துணை உருக்கமும், பலிதமும் உள்ளனவா யிருப்பதாலே அவற்றை மீண்டும்மீண்டும் உச்சாரணம் செய்வதால் அதற்கு ஒருசிறப்புண்டு. நாங்கள் அயர்வடைவதில்லை. அன்றியும் கன்னிமரியம்மாள் தேவனின்தாய். 'பெண்சாதிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே' என்று அதிதூதன்கபிரியேலால் ஸ்துதிக்கப்பட்டவள். இத்தகைய வார்த்தைகளைப் பாவிகளாகியநாங்கள் எத்தனைமுறை சொல்லி வாழ்த்தினும் போதுமோ? பரலோகத்தில் சம்மனசுகள் ஓயாது "பரிசுத்தர், பரிசுத்தர், தளங்களின் கர்த்தர்" என்று ஸ்துத்தியம் பாடுகின்றனராயின், மரியாயை மனமாரவாழ்த்தப் பாவிகளாகியஎங்களுக்குக் கிடைத்தது பெருஞ்சனுவன்றோ! எனவே, செபமாலைச்செபங்கள் வேதாகமத்திற் கூறியுள்ள மிகச்சிறந்த வாய்ச்செபக்கோவை. இவற்றை மனச்செபமாகும் தியானத்தோடு இணைத்துத் திருச்சபை நமக்குக்கொடுத்துள்ளது. தியானப்பொருள்கள் நமதுதிவ்விய கர்த்தரினதும், பரிசுத்தகன்னி மரியாயுடையவும் சுகிர்த சீவிய மாதிரிகைகள்.

ஒன்றித்துச்செபிக்கும் வழக்கமுள்ளகுடும்பம் ஒருபோதும்சீர்கெடாது. துன்பங்கள் இல்லாது ஒழியுமென்பதல்ல, இதன்கருத்து. [illegible]னில், துன்பங்கள் இவ்வுலகில் மனிதனின்பங்கு. ஆயின் செபிக்கும் குடும்பம் துன்பங்களை மேற்கொள்ள அறியும். வரப்பிரசாதம் அதற்குக்குறைபடாது. குடும்பங்களில் உண்டாகிற பெரியஇன்னல் என்னவென்றால், ஒருவர் மற்றவருக்குஉண்டாக்கும் மனஊறல். இதிலும் பார்க்கப் பழுவானதுன்பம் வேறெதுவுமில்லை. ஒன்றித்துச் செபிக்கும் குடும்பத்தில் இந்த நிர்ப்பாக்கியம் இருக்கமுடியாது. அன்புதான் குடும்பத்தின் பந்தனம். இதைச்சிதைப்பது சுயபட்சம். எரிச்சல். காய்மகாரம், வைராக்கியம், பிரிவினை யாவும் சுயபட்சத்தின் விளைவு.

ஒன்றித்துச்செபிக்கும் குடும்பத்தில் இவைகள் இடங்கோலா. குடும்பவாசிகளே! குடும்பசெபமாலையை ஒருமித்துச் சத்தமாய்ச்செபியுங்கள். உங்கள் குடும்பத்தைப் பிணைக்கும் அன்பாகும்பந்தனம் குடும்பசெபமாலைஎன்பதை மறவாதீர்கள். கணவனே மனைவியோ, பெற்றோரோ பிள்ளையோ அறியவேண்டிய உண்மையாதெனில், அன்பில்நிலைத்திருக்க மூவர் தேவை. நேசிக்கிறவர், நேசிக்கப்படுபவர், அன்பின்சொரூபியாகிய கடவுள். கடவுள்தான் அன்பு. நேசர்இருவர் அன்பில் நிலைத்திருக்க வேண்டுமாயின் கடவுளின்அன்பாற்தான் முடியும். செபந்தான் தேவநேசத்தை எங்களுக்கு அடைந்துதருவது. குடும்ப செபமாலைதான் இதற்குச் சிறந்தவழி. "ஒன்றித்துச் செபிக்கும் குடும்பம் ஒன்றித்து வாழஅறியும்."

"பிரியதத்தத்தினலே பூரணமானவளே வாழ்க, கர்த்தர்உம்முடனே, ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே!" என்று மீண்டும்மீண்டும் சொல்லுந்தோறும் நமதுதேவஅன்னையின் இதயத்தில் மங்களவார்த்தை கேட்டபோது அவள் பெற்ற ஆனந்தத்தைப் புதுப்பிக்கின்றோம். அன்றியும் வரப்பிரசாதங்களின் மத்தியட்சகியாய் இருப்பவளிடம் இப்பொழுதும், எங்கள் மரணநேரத்திலும் வேண்டுவனயாவையும் இரந்துகொள்ளுகிறோம். மேலும்செபமாலை சீவியத்துக்கு ஓர்ஏற்பாடு. காரணிக்கங்கள்தோறும் வழியும், சத்தியமும், சீவனும்ஆனவரின் சீவியத்தின் ஒவ்வோர் பரமஇரகசியத்தையும் தியானிக்கின்றோம். குடும்பசெபமாலை குடும்பங்களைக் காக்கும். குடும்பங்கள் சேமமுற்றால் உலகமும்சேமமுறும்.

"மாலைப்பொழுதில் தினந்தவேலைமுடிந்ததும், கிறீஸ்துவகுடும்பத்தினர் தேவதாயின் திருச்சுரூபத்தின்முன் ஒன்ருய்க்குழுமிச் செபமாலைஓதுவது, பரலோகஇராக்கினியின் புகழ மேன்மேலும் அவர்கள் இல்லத்தில் பிரதிபொலிக்கக் கேட்பது, ஆ, என்ன மனேகர காட்சி! தேவனுக்கு எத்துணை

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

ஞானேபதேசக் காட்சிமைதானத்திலே திருக்காட்சி அருளவிருக்கும் அமலோற்பவ மரியநாயகியின் திருச் சுரூபம்



இச்சுரூபத்தின் முன்பாகவே சமாகம சுபதினங்களில் தேவாராதனைத் திருச்சடங்குகள் நடந்தேறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை நாயகி

(Sister Mary Amatora, O. S. F.)

பிரான்ஸுக்கும், ஜேர்மனிக்குமிடையே முன்னில்லாத கோரயுத்தம் நடந்துகொண்டிருந்தது. அதுதொடங்கிப் பலமாதங்களாகியும் முடிந்தபாடில்லை. பிரான்ஸுக்குக் கனத்தசேதம். நாளாகஆக நிலைமை மோசமாகிக்கொண்டு வந்தது. ஜேர்மனியர் எல்லாப்பக்கங்களிலும் முன்னேறிச்சென்று பரீஸ்பட்டணத்தில் நுழைந்துவிட்டார்கள். லவால்நகரை அணுகிக்கொண்டிருந்தார்கள். போன்மேன்நகருக்கு இன்னும் முப்பதுமைல் இருந்தது.

1871-ம் ஆண்டு தைமாதம் 17-ம் நாள் மத்தியானத்துக்குப்பின் செசார் பார்பதெத்என்பவர் தனது மக்களான பன்னிருவயதுள்ள யுஜீனுடனும், பத்துவயதுள்ள யோசேப்புடனும் தனது மிருகங்களுக்கு உணவு தயாரித்துக்கொண்டிருந்தார். வானத்தைக் கவனிக்கும்படி யுஜீன் வெளியேசென்றான். நேரம் ஏறக்குறைய ஐந்தேகால்மணி. ஏற்கனவே இருள் பரவிவிட்டது. ஆகாயம் தெளிவாயிருந்தது. நட்சத்திரங்கள் காணப்பட்டன. அப்பொழுது அடுத்தவீட்டின்மேல் காணப்பட்ட மேகம் அவனுடைய கவனத்தைக் கவர்ந்தது.

"பார், பார், உனக்குஏதாவது தெரிகிறதா?" என்று அவன் கூவினான். யோசேப் உடனேஓடிப்போய்ப் பார்த்தான். "அவளுடையஉடை மங்கிய நீலநிறமாயிருக்கிறது. அதில்நிறையத் தங்கநட்சத்திரங்கள். பாதங்கள்வரை உடைதொங்குகிறது. சப்பாத்துகள் நீலநிறம். தலையில் கறுப்புமுக்காடு. அதன்உச்சியில் ஒருதங்கக்கிரீடம். அதைச்சுற்றிலும் மத்தியில் சிவப்புத்துணி கட்டப்பட்டிருக்கிறது. புன்சிரிப்புடன் இருக்கிறாள். கரங்களை நம்மைநோக்கி நீட்டியிருக்கிறாள்" என்று தான்கண்டதைப்பற்றி யோசேப் விபரித்தான்.

சிறுவர்களின் மூளையில் ஏதோ கோளாறு ஏற்பட்டதாக நினைத்த செசார் அவர்களை வேலைக்குஅனுப்பினார். எனினும் விநோதப்பிரியத்தால் தூண்டப்பட்டுப் பார்க்கும்படி தானும் வெளியேசென்றார். ஒன்றையும் காணவில்லை; "யுஜீன்! அந்தப்பெண் இன்னும்அங்கு இருக்கிறாளா? போய்ப்பார்!" என்றார்.

அவன் ஆம்என்றதும், "போய் அம்மாவை அழைத்துவா" என்றார்.

அவள்வந்து பார்த்தாள். "இப்படிக் கதைகட்டிவிட உங்களுக்குஎவ்விதம் துணிவுவந்தது? உண்மைபேசும்சிறுவர்களையே தேவதாய்நேசிக்கிறாள்" என்று அவள்சொல்லி அவர்களைத் திட்டி அவர்களின்காதை நன்றாகத் திருகினாள்.

"அம்மா, நாங்கள் உண்மையேபேசுகிறோம். பிரகாசமுள்ள நட்சத்திரங்களாலான முக்கோணத்தினுள் அந்த அழகியபெண்ணை நீங்கள் பார்ப்பதில்லையா?" என்று இருவரும் ஒருவாய்ப்படக் கூறினர்.

தாய் தனதுமூக்குக்கண்ணாடியைப் போட்டுப்பார்த்தாள். நட்சத்திரங்களுடன்இருந்த வானம்மாத்திரமே காணப்பட்டது. தாங்கள்இன்னும் அந்தஅழகியபெண்ணைக் காண்பதாகச் சிறுவர்கூறினமையால், மடத்திலிருந்து விற்றலின்கன்னியாஸ்திரியை அழைத்துவரச்சொன்னாள்.

அவரும் வந்துபார்த்தார். விசேஷம் ஒன்றும் தோன்றவில்லை. "காட்சி ஒருவேளை சிறுவர்களுக்குமாத்திரமே தோன்றும்போல் இருக்கிறது; நமது மடத்துப் பள்ளிக்கூடச் சிறுமியர்சிலரை அழைப்போம்" என்று கன்னியாஸ்திரிகூறினார்.

மூன்றுசிறுமியர் வந்தனர். பிரான்சுவா ரிஷேர், ஜோன்மரி லெபோஸ் என்ற இருவரும் மாதாவைப்பார்த்தனர். யுஜீனும், யோசேப்பும் சொன்னதையெல்லாம் அவர்களும்கண்டனர்.

இதற்குள் கிராமமக்கள்பலர் அங்கு வந்துகூடிவிட்டனர். தாய்மாரின் கையிலிருந்த இருகுழந்தைகள் காட்சி தோன்றிய இடத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்ததுமன்றிச் சந்தோஷத்துடன்கூச்சலிட்டுக் காட்சி தோன்றிய இடத்தைநோக்கிக் கைகளை உயர்த்தி மாறிமாறிக்கைதட்டினர்.

பங்குக்குருவான மிக்கேல் கெரின்சுவாமியார்வந்தார். நட்சத்திரங்களாலான முக்கோணத்தை எல்லோரும் பார்த்தார்கள். தேவதாயை நான்குசிறுவர்கள் மாத்திரமேகண்டனர்.

பெரியகூட்டம் திரண்டுவிட்டது. அவர்கள்வரட்டுமென்றே தேவதாயார் காத்திருந்தார்போலும். தாங்கள்கண்டதைச் சிறுவர்கள் எடுத்துரைக்கையில் எல்லோரும் கவனமாய்ச் செவிகொடுத்துக்கேட்டார்கள்.

அதுவரை. புன்சிரிப்புடனிருந்த தேவதாயார் இப்பொழுது துயரத்துடனிருந்தார். நீலநிறவட்டம் அவரைச் சுற்றிலும் காணப்பட்டது. அவருடையமார்பில் சிவப்புச்சிலுவை. செபமாலையைச் செபிப்போமாகஎன்று பங்குக்குருவர் கூறினார்.

பத்திஉருக்கத்துடன் எல்லோரும் செபமாலைசெபித்தனர். அதன்பின் தேவமாதாபிரார்த்தனை. செபமாலையின்போது மாதாவின்காட்சி உருவத்தில் பெரிதாகத்தோன்றிற்று. அவரது உடைமீதிருந்த நட்சத்திரங்களின் எண்ணிக்கையும், சோதியும் அதிகரித்தன. பிரார்த்தனைக்குப்பின் எல்லோரும்சேர்ந்து "என் ஆத்துமமானது ஆண்டவரைவணங்கித் தோத்திரம் பண்ணுகிறது" என்னும் கீதத்தைப் பாடினர். அப்பொழுதுமாதா தமது கரங்களால் தாளம்இசைத்தாற்போல் இருந்தது.

கீதம்முடிந்ததும் மாதாவின்பாதத்தில் நீண்டகுறுகிய கொடிதோன்றியது. அது விரிந்துகொண்டே செல்கையில் பின்வரும்வார்த்தைகள் அதில் தோன்றின: "ஆனால், செபியுங்கள் என் மக்களே; கடவுள்சீக்கிரம் உங்கள்மன்றாட்டைக் கேட்பார்; என்மகன் எளிதில் மனம்இரங்குபவர்."

சிறுவர் இந்தச்செய்தியை வாசித்துமுடிந்ததும், எழுத்துகள் ஆகாயத்தில் மறைந்தன. தேவதாயார் இரத்தம் போன்ற சிவந்த பாடுபட்டசுரூபம்ஒன்றைத் தமதுகரங்களில் எடுத்தார். பாடுபட்டசுரூபத்தின்மேல் ஒருகுறுக்குக் கம்பி. அதில் "யேசுக்கிறீஸ்து" என்னும் எழுத்துகள். சிலநிமிஷங்களில் பாடுபட்டசுரூபம் மறைந்தது.

இதுவரை துயரத்துடன்இருந்த அன்னையின்முகத்தில் சந்தோஷம் காணப்பட்டது. புதுமைச்சுரூபத்தில் இருப்பதுபோல் அவரதுகரங்கள் கீழ்நோக்கி அங்கிருப்பவர்களின் பக்கமாய் நீட்டப்பட்டன. சிறிதுநேரம் தேவதாயார்சிறுவர்களையும், பின்னர்கூட்டத்தையும்நோக்கிப் புன்னகைகாண்பித்தார். சீக்கிரம் ஒருவெள்ளைமேகம் தோன்றியது. அதை எல்லோரும் பார்த்தார்கள். அதுபெரிதாகி நட்சத்திரங்களாலான முக்கோணத்தை நிரப்பியது. மேகம்பெரிதாக, மாதாவின் உருவம் மறைந்தது.

அன்று மத்தியானத்துக்குப்பின் லவால்நகரைநோக்கி ஜேர்மன்படைகள் முன்னேறிச்சென்றுகொண்டிருந்தன. திடீரென யாரும் எதிர்பாராதவிதமாய் லெமான்நகரிலிருந்த ஜேர்மன்தளபதி ஷ்மிட் கையில் உத்தரவுக் கடிதம் கொடுக்கப்பட்டது. "லவாலைப் பிடிக்கவேண்டாம். பட்டாளம் பத்துமைல்தூரம் பின்வாங்கட்டும்" என்று அதில் எழுதியிருந்தது. பதி

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## உலக சரிதையில் கன்னிமரியாயின்

# மகிமை வரங்கள்

அமெரிக்க பத்திரிகை ஒன்றிலிருந்து
வண. எஸ். ஏ. ஞானப்பிரகாசம் சுவாமியவர்களால்
தமிழாக்கம் செய்யப்பட்து.

**கி.மு.ன் —4117?** ஆதாம், ஏவாள் செய்த பாவத்தின்பின் மரியாயும், அவரதுதிருமகனும் சாத்தானின் தலையை நசுக்குவார்கள்:

**ஆதி ஆக. 3 : 15.** "(சாத்தான்) உனக்கும்ஸ்திரீக்கும், உன்னுடைய வித்துக்கும் அவளுடைய வித்துக்கும் (இடையே) பகையைஉண்டாக்குவோம். அவள் உனதுதலையை நசுக்குவாள்."

**2070** — செகமீட்பரையும், அவரது திருமாதாவையும் பற்றி ஆபிரகாமுக்குத் திருவாக்களிக்கப்பட்டது.

**ஆதி ஆக. 18 : 18.** "அவன் மிகவும் பெரிய பலத்தசாதி யாவான். மேலும் பூமியிலுள்ள சகலசாதிகளும் அவனுக்குள் ஆசீர்வதிக்கப் படவிருக்கிறார்கள்."

**1862** — யாக்கோப்எனும் பிதாப்பிதா தமது மகனாகிய யூதாவின்மேல் தீர்க்கதரிசனமாய் வசனித்தபொழுது: யேசுநாதர் யூதாவின் பிதிர்வழியிலிருந்து மரியாயின்மூலமாகப் பிறப்பாரென அறிவிக்கப்பட்டது.

**ஆதி ஆக. 49 : 10.** "அனுப்பப்படவிருக்கிறவர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதுமில்லை; அவனுடைய சந்ததியில் இறைவன் ஒழிவதுமில்லை. (அனுப்பப்பட இருக்கிறவரோ) சர்வசாதி சனங்களும் அவருடையஆகமனத்திற்குக் காத்திருப்பார்கள்.

**973—932** — மரியாயின் மகிமைகளைப்பற்றிச் சலமோன் இராசா எழுதியவைகளைத் திருச்சபை தனது தேவாராதனைச் சடங்கு முறைகளில் வாசித்துவருகிறது.

**பழமொழி ஆக. 8 : 22-23.** "ஆண்டவர் தமதுவழிகளின் துவக்கத்திலேயே, ஆதியில் யாதொன்றையும் உண்டாக்குமுன்னரே என்னைச் சுதந்தரித்திருந்தார். பூர்வங்களில், பூமிஉண்டாகமுன்னமே நித்தியந்தொட்டு நான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறேன்." சர்வபிரசங். ஆதியிலும், யுகங்களுக்கு முந்தியும் சிருட்டிக்கப்பட்டேன்.

**2414** — எக்காலத்துக்கும் இராமலும்இரேன். பரிசுத்தவாசஸ்தலத்தில் அவருடைய சமுகத்தில என் தொழிலைச் செய்தேன்.

**கி. முன் 732-726.** அக்காஸ் அரசன் ஆண்டவரிடம் ஓர் அடையாளம் கேட்கமறுத்தார். ஆனால், மரியாயின் கன்னிமையையும், கிறீஸ்துநாதர் ஓர்கன்னிகையிடத்திருந்து பிறப்பதையும் இசையாஸ் தீர்க்கதரிசியானவர் வற்புறுத்துகின்றார்

**இசையா. 7 : 14.** "ஆண்டவர்தாமே உங்களுக்கு அற்புத அடையாளம் ஒன்றைத்தருவார். இதோ! ஓர் கன்னிகையானவள் கற்பமாகி ஓர் மகனைப்பெறுவாள். அவர் எம்மானுவேல் எனும் நாமம்பெறுவர்."

அதே காலத்திலேயே எசேக்கியேல் தீர்க்கதரிசியானவர் சொல்லியுள்ளதாவது:

இந்தியசித்திரங்களில்தேள்மாதிரியாகத்தோன்றும் விருச்சிகஇராசி எகிப்திய சித்திரங்களில் (Ophiuchus) ஒபியுக்கஸ் எனும் ஓர்மானுடன் தன்னைச்சுற்றிக்கொண்ட ஓர் சர்ப்பத்தோடு பொருதுவதாயும், அவன் ஒருகாலால் தேளின் தலையை மிதிக்க, அது மறுகாலில் அவனைக் கொட்டுவதாயும் காட்டியிருக்கின்றது. இது பழம்பழிச் சர்ப்பத்தால் மானுடருக்கு வந்த சேட்டை நினைவூட்டுங் காட்சியே என்பது யாருக்குத் தோன்றுதிருக்கும்? **கன்னி இராசி** பூர்வசித்திரங்களில் முதலிடத்தில் விளங்கும் கன்னியாகுமரி ஆலய மச்சுச்சித்திரத்திலேயும் அது தலையிடத்தில் இருக்கின்றதுமன்றி, மீட்டும் சதுரங்கத்தின் நடுவிடத்திலும் ஓர் தாமரைப்பூவினுள் வருகின்றது. இனி **கன்னி இராசியின் ஆதிச்** சித்திரத்தைப் பார்ப்பின்: இருமருங்குஞ் சிறகுள்ள ஒரு இளம் நங்கை தரையில்வீழ்ந்த பான்மையாய்க் கிடக்கிறதையும், ஒரு கையில் தானியக் கதிர்களையும், மறுகையில் ஓர்குருத்தோலையும் பிடித்திருக்கிறதையும் காணலாம். கன்னி நட்சத்திரத்தின் அதிபிரபைபான உருவம் (தாரகை) தானியக்கதிரிலேயே பொருந்தி இருக்கின்றது. இதற்கு இப்போது கன்னியின்கதிர் (Spica Virginis) என்று பெயர். அராபியத்தில் இது (Abzim-ach) அதாவது கிளை எனப்படும்.

(இசையாஸ் 4 : 2. சகிரியா 3 : 8. 6 : 12.) இது ஸ்திரீயின்வித்து பாம்பின்தலையை நசுக்கும் என்ற எபிரேய வேதத்துத் தீர்க்கதரிசனத்தைக் குறிப்பது என்பர். விழுந்துகிடக்கிற ஸ்திரீயின் சிறகுகள் அவளது பூர்வஉன்னதஸ்திதிக்கு அடையாளமாய் அமைந்தன போலும். ஆயின் கன்னிஇராசியோடுசேர்ந்த (Coma) கோமா எனும் நட்சத்திரத்தின் சித்திரம் இதைச் சந்தேகமற விளக்கும். அதிலே ஒரு யௌவன ஸ்திரீ ஓர் பாலனை மடியில் வைத்துப் பாலூட்டுகின்றவளாகக் காட்டியிருக்கின்றது.

**எசேக்கியேல் 44 : 2.** "அப்பொழுது ஆண்டவர் என்னைநோக்கிச் (சொன்னதாவது) இந்தவாசலின் கதவு பூட்டியேகிடக்கும்; அது திறக்கப்படுவதேயில்லை; (எந்தப்) புருஷனும் அதற்குள்பிரவேசிப்பதில்லை; ஏனெனில், இஸ்ராயேலின்தேவனாகிய ஆண்டவர் அதற்குள் பிரவேசித்தனர். அது பூட்டப்பட்டே கிடக்கும்."

**கி. பின் 9—8.** ஆண்டவருடைய சம்மனசான கபிரியேல் மரியாய்க்கு விசேஷஞ்சொல்ல அவள் இஸ்பிரீத்துசாந்துவினாலே கர்ப்பவதியானாள். (கபிரியேல்எனும்) தேவதூதன் அவள் (மரியம்மாள்) இருந்த இடத்தில் பிரவேசித்து: பிரியதத்தத்தினாலே பூரணமானவளே வாழ்க! கர்த்தர் உம்முடனே, ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள்நீரே.

**லூக். 1 : 28. 31-32.** இதோ! உமது உதரத்தில் கெற்பந்தரித்து ஓர்குமாரனைப் பெறுவீர். அவருக்கு யேசு என்னும் நாமஞ்சூட்டுவீர். அவர் பெரியவராயிருப்பார். உன்னதமானவரின் சுதன் என்னப்படுவார். ஆண்டவராகிய சருவேசுரன் அவர் தந்தையாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குத் தந்தருளுவார். ஆதலால் அவர் யாக்கோபின் கோத்திரத்தில் என்றென்றைக்கும் அரசாளுவார்.

மரியம்மாள் தனதுபந்துவான எலிசபேத்தைச் சந்திக்கப்போனவிடத்து மாதாபாடிய "மக்னீபிக்காத்" எனும் சங்கீதம்:

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மரியாயின்சபைகள் மகாநாடு

சர்வதேசமரியாயின்சபைகள் மகாநாடு சமீபத்திலே றோமாபுரியில் பெரிதும்கவர்ச்சிகரமாய் நடந்தேறியது. அதற்கு உலகின்பல்வேறு நாடுகளிலிருந்தும் 12,000 பிரதிநிதிகள்வரை சமுகமளித்தார்கள். இந்தமரியாயின் வருடத்திலே இதுவரைநிகழ்ந்துள்ள பக்திப்பரவச காட்சிகளிலெல்லாம் இதுவே மகாப்பெரிய தொன்றாயிற்று. வெள்ளிக்கிழமையன்று இந்தமகாநாட்டுப்பிரதிநிதிகளுடன் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களுஞ்சேர்ந்து அர்ச். மேரிமேஜர் மகாலயத்திலே "மவுனதிருச்சபை"க்காக — அதாவது கம்யூனிஸ்தர்களின் ஆட்சியிலுள்ள நாடுகளிலே துன்புறுத்தப்படும் கத்தோலிக்க மக்களுக்காக விசேஷவிதமாக மன்றாடினார்கள். இந்தமகாநாட்டுக்குப பதினைன்குஇரும்புத்திரை நாடுகளுள் ஒவ்வொன்றிலுமிருந்து ஒவ்வோர்பிரதிநிதி சமுகமளித்திருந்தார்.

### பதினாறும் நூற்றாண்டுவிழா

திருச்சபையின் பெரியவேதபாரகர்களில் ஒருவரான அர்ச். அகுஸ்தீனார்பிறந்த பதினாறும் நூற்றாண்டுவிழா இந்நாட்களில் கொண்டாடப்படுகிறது. இதன் ஞாபகார்த்தமாகப் பரீஸ்நகரிலே சர்வதேச அகுஸ்தீனிய மகாநாடுஒன்று சென்றபுரட்டாசி 21-ந்திகதிமுதல் 24-ந்திகதிவரை நடைபெற்றுள்ளது. ஏனைய கொண்டாட்டங்கள் அவரது புராதன ஹிப்போமேற்றிராசனத்தில் நடந்தேறுகின்றன. இவ்விழாவைமுன்னிட்டு, உலகமுழுவதிலும் பரந்துள்ள அகுஸ்தீனார்சபையின் அதிசிரேஷ்டருக்குப் பரிசுத்தபாப்பரசர் அனுப்பியுள்ள திருமுகம்ஒன்றிலே: அர்ச். அகுஸ்தீனார் எழுதிய நூல்களைப் படித்ததிலிருந்தே கருதினால்நியூமன் மனந்திரும்பினாரெனத் தெரிவித்திருக்கின்றார். அந்தநூல்களைப்படித்து உண்மையைக் கண்டறிந்தபோது, அவர் கபடமற்ற சுத்தமனத்துடன் தன்னிஷ்டமாக யேசுக்கிறீஸ்துநாதரின் ஒரே மந்தையில் சேர்ந்துகொண்டாரென்றும் அதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

### செபமாலைக் காப்பு

அயர்லாந்திலே தமது செபமாலைப்படையணியைச் சமீபத்தில்நடத்தியபோது தாம்சிநேகிதஞ் செய்துகொண்ட ஒருசில விசேஷப்பட்ட சிநேகிதர்களுக்கு வண. பற்றிக் பெயிற்றன் சுவாமியார் வழமையில்இல்லாத அன்பளிப்பு—அதாவது "செபமாலைக்காப்பு" அனுப்பிவைத்திருக்கிறார். இந்தச்செபமாலை ஒருகாரணிக்கத்தையே—பத்து மணிகளையே அடக்கியுள்ளது. மணிக்கட்டிலே கட்டிக்கொள்ளத்தக்கது. இந்தமாதிரிச்செபமாலை நிலத்தின்கீழுள்ள நடைபாதைகளிலும், பஸ்களிலும் செல்லும்போது பெண்பிள்ளைகளும், பெண்மணிகளும் ஆடம்பரமின்றியே தங்கள்செபங்களைச் சொல்லக்கூடியதாகச் செய்வதாலே நியூயோர்க்நகரில் இது மிகவும்பிரஸ்தாபம் பெற்றதாகிவிட்டது. ஆயினும் இந்த "ஒருமணிச்செபமாலை" ஆரம்பத்தில் அயர்லாந்துக்கே உரியதாயிருந்தது. 1847-ம் ஆண்டு நடந்த ஐரிஷ் பஞ்சத்துக்குப் பிறகு அமெரிக்காவில்போய்க் குடியேறிய ஐரிஷ் மக்களால் இது அமெரிக்க ஐக்கியதேசத்துக்குக் கொண்டுபோகப்பட்டதென நம்பப்படுகிறது. மேற்கு அயர்லாந்திலே இம்மாதிரிச் செபமாலை "பொத்திய கைச் செபமாலை" என அறியப்பட்டது.

### சிறைவாசஞ்செய்யும் கருதினால்

வீயன்னா நகரிலே 43-வது சர்வதேச பாராளுமன்ற ஐக்கியமகாநாட்டுக்குச் சமுகமளித்திருந்த பிரதிநிதிகள்மத்தியில் பிரசித்தமான அறிக்கை உண்மையாயிருப்பின், சிறைவைக்கப்பெற்றுள்ள ஹங்கேரியதேச திருச்சபை அதிகாரியான கருதினால் மின்ட்சென்றி ஆண்டவர் விரைவிலே விடுதலைசெய்யப்படுவார். வீயன்னாநகரிலுள்ள ஹங்கேரியஸ்தானீகர் காரியாலயத்தில் அளிக்கப்பட்டஓர்வரவேற்பிலே ஹங்கேரிய அரசாங்க மகாசபையின் தலைவரான சான்டர் ரொனுய்என்பவர் பேசியபோது: கருதினாலாண்டவரை விடுதலைசெய்வதுபற்றிய அறிவித்தலை விரைவிலே எதிர்பார்க்கலாமெனக் கூறியதாகச் சொல்லப்படுகிறது. கருதினாலாண்டவரை விடுதலையாக்குந் தீர்மானம் செய்யப்பட்டுவிட்டதென்றும், ஆனால், அவரை விடுதலையாக்குவது சம்பந்தமான நிபந்தனைகள் இன்னுமே செய்யப்படவில்லையென்றும் அங்கு சமுகமளித்த ஹங்கேரியபிரதிநிதிகள் பிரத்தியேகமாகக் கூறியிருக்கிறார்கள்.

## கத்தோலிக்க



## சமாச்சாரம்

### தென்கோறியாவும் திருச்சபையும்

லண்டன்நகரிலே "டெயிலி வோக்கர்" எனும் பத்திரிகையின் முன்னாள் செய்திஆசிரியரும், இருபத்திரிகைகளின் பிரதிநிதியாகச் சுதந்திர தென்கோறியாவுக்குச் சென்றுள்ளவருமான திரு. டக்ளஸ் ஹைட் அவர்கள் அங்கிருந்து எழுதியிருப்பது வருமாறு: "வட கோறியாவிலிருந்து கம்யூனிஸ்தர்களால் துரத்திவிடப்பட்ட பதினாயிரக்கணக்கான கத்தோலிக்கர் தற்போது தென்கோறியாவிலுள்ள தங்கள் கத்தோலிக்க சகோதரருடன்சேர்ந்து நாள்தோறும் திவ்வியபூசை கண்டுவருகிறார்கள். கோவில்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், மற்றும் ஸ்தாபனங்களை அமைப்பதற்கு வேண்டிய தொழிலாளர்களை உதவிவருகின்ற விசாரணைப்பங்குகளுக்குத் தேவைப்படும் கட்டுவேலைக்குரியசாமான்களைப் பாதுகாப்புப்பட்டாளங்கள் உதவிவருகின்றன. கம்யூனிஸத்தை எதிர்த்து நடைபெற்றுவரும் உலக போராட்டத்தில் கோறியா ஓர்மேம்பட்ட நாடும், அதிகம் சேமமானவைகளில் ஒன்றுமாகும். ஏனெனில், இலகுவில் காலூன்றக்கூடிய இடங்களையே கம்யூனிஸ்தர்கள் தேடுகிறார்கள். அநேகமாய் இந்தோசீனா அவர்களுக்கு இலகுவில் காலூன்றக்கூடிய ஓர் இடமாகத் தோற்றியது. ஆனால், கோறியா அவர்களுக்குத் திட்டமாகவே ஓர்கடினநிலமாகும். ஏனெனில், இது நன்குஅரண் செய்யப்பட்டதாயும், நன்கு பயிற்சிபெற்ற சேனையைக் கொண்டதாயும் இருக்கின்றது. ஆன்மதத்துவஞான விஷயமாய்க் கோறியா கம்யூனிஸ்தர்களுக்குக் கடினமான ஓர்நிலமாகும். ஆனால், கத்தோலிக்க திருச்சபைக்கோ அது ஓர்தங்கமான சந்தர்ப்பத்தை அளிப்பதாகின்றது. தென்கோறியாவிலுள்ள 100 விசாரணைப்பங்குகளுள் ஒவ்வொன்றிலும் ஞானஸ்நானத்துக்கு ஆயத்தஞ் செய்து வருகிறவர்களின் சராசரிவீதம் 150 பேருக்கு மேலாகும். அதிகமான மிஷனரிமாரும், உபதேசிமாரும் இருந்தால் இத்தொகை எவ்வளவோபெரிதாக அதிகரிக்கும்."

### இல்லிடமற்றோரின் அப்போஸ்தலர்

அபெ பியேர்என அறியப்படுகின்ற வண. பீற்றர்சுவாமியார் இன்று பிரான்சிலும், பிறநாடுகள்பலவற்றிலும் இல்லிடமற்றோரின் அப்போஸ்தலராக அறியப்படுகின்றார். எந்தநேரமும் வதனத்தில் புன்னகைதவழக் காட்சியளிக்கின்ற இவர் பிரான்சிலே ஓர்பெரிய செல்வந்தரின்புதல்வர். ஆனால், வறியவர்களுக்குத் தமதுவாழ்க்கையை அர்ப்பணஞ் செய்வதற்காகத் தமதுசொத்துகளையெல்லாம் அறவே துறந்துவிட்டார். பரீஸ்நகரிலே இல்லிடமற்ற ஏழைகளுக்குவீடுகட்டிக்கொடுப்பதற்கென இவர்தொடக்கிநடத்திய இயக்கமானது பிரான்சிய அரசாங்கத்தைத் திகைக்கச் செய்து அதுதானும் இதுவிஷயமாய் நடவடிக்கைஎடுக்கச் செய்துவிட்டது. இவர் 18 வய[illegible] இளைஞராய்இருந்தபோது கப்புச்சின் சபையில் சேர்ந்தார். எட்டுவருடங்களின்பின் க்ஷயரோகங்கண்டு சந்நியாச மடத்தைவிட்டு வெளிகொண்டாராயினும் பிறகுகுணமடைந்தார். சென்றயுத்தத்திலே இருமுறை ஜேர்மனியராலும், இத்தாலியராலும் கைதுசெய்து சிறைவைக்கப்பட்டும் இருமுறையும் தப்பியோடிவிட்டார். அப்போது பிரான்சிய எதிர்ப்புப் படையின் தலைவராயுமிருந்து நாட்டின்விடுதலைக்காக உழைத்துவந்தார். அது விடுதலையடைந்தபின் முதலாவதுபிரான்சிய பாராளுமன்றத்தில் ஓர்அங்கத்தவராகி 1951-ம்ஆண்டுவரை அதில் பதவிவகித்திருந்து பின்னர் அரசியலிலிருந்து விலகிப் பரீஸ்நகரிலுள்ள சனநெருக்கமான சேரிகளில்வசித்து, இல்லிடமற்றவர்களுக்கு இல்லிடம் கட்டி உதவும் தமதுஅப்போஸ்தலதொண்டை ஆரம்பித்தார். தமது முதல்முயற்சியாக அங்கு "அவசரகால பட்டினம்" ஒன்றை அமைத்து அதிலே முன்னூறுவீடுகளைத்திடீரெனக்கட்டிமுடித்தார்.

### கம்யூனிஸ்த கிழக்குஜேர்மனி

76-வது ஜேர்மனிய கத்தோலிக்க மகாநாடு மேற்குஜேர்மனியிலுள்ள புல்தா நகரிலே ஐந்துதினங்களாக நடைபெற்றுச் சென்றபுரட்டாசி 5-ந்திகதி முடிவாயிற்று. அதற்குச் சோவியற்அரசின் ஆதிக்கத்திலுள்ள கிழக்கு ஜேர்மனியிலிருந்து மெலிந்தமுகத்தினரும், கேவலமான உடைதரித்தவர்களுமான சுமார் 30,000 கத்தோலிக்கர் பழையசைக்கிள்கள் உட்படத் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய போக்குவரத்துச் சாதனங்களிலே நூறுமைல்தூரத்திற் கப்பாலுமிருந்துசென்று சமுகமளித்து மற்றும் 1,70,000 ஜேர்மன் கத்தோலிக்கருடன் கலந்துகொண்டார்கள். இவர்கள் புல்தாநகரிலும், அதன்சுற்றாடலிலுள்ள கிராமங்களிலும் இலவச உணவும், தங்குமிடமும் அருளப்பெற்றார்கள். அவற்றுடன் கைச்செலவுக்கென்றும் தனித்தனியே பத்துச்சிலினும் பெற்றுக்கொண்டார்கள். கிழக்கு ஜேர்மனியிலும், மேற்குஜேர்மனியிலுமாய் நெடுங்காலமாகப் பிரிந்துபோயிருந்த குடும்பத்தினரும், சிநேகிதரும் அப்போது ஒருவரையொருவர் சந்தித்துக்கொண்டகாட்சி பெரிதும்மனவுருக்கத்தை உண்டுபண்ணுவதாயிருந்தது. சென்ற ஏழுவருடங்களாகக் கிழக்கு ஜேர்மனியிலிருந்து மேற்குஜேர்மனிக்குப் போகச் சோவியற்அதிகாரிகள் எவருக்குமே அனுமதியளிக்கவில்லை. கிழக்கு ஜேர்மனியில் வசிப்பவரும், படர்போண்நகரின் துணை மேற்றிராணியாருமான றின்ரெலன் ஆண்டவர் மகாநாட்டில் பேசியபோது: மேற்குஜேர்மனியிற்போலக் கம்யூனிஸ்த கிழக்குஜேர்மனியிலே திருச்சபைசிலவேளை குரலெடுத்துப்பேச வகையற்றதாயினும் உயிருள்ளதும், பலமுடையதும், தியாகத்துக்குத் தயாருமாய் இருக்கிறதெனக் கூறினின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐப்பசி மாதம்

போதுக்கருத்து :— சிறுவர்களிடம் இளம்பிராயத்திலிருந்தே மெய்யான கிறீஸ்துவமனச்சாட்சி உருவாகும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து :— வேதபோதகநாடுகளிலே குருத்துவஅழைத்தல் எண்ணிக்கையிலும், தரத்திலும் உயரும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத

# பாதுகாவலன்

1954-ம் ஆண்டு
ஐப்பசி மாதம் 7-ந் திகதி

## மரியாயின் சமாகமமும் ஞானோபதேசக் காட்சியும்

யாழ்ப்பாண இராச்சியம் அக்காலத்திலேயே போர்த்துக்கேயரால் தேவதாயாருக்கு நேர்ந்து ஒப்புக்கொடுக்கப்பெற்ற ஓர் செல்வநாடாகும். அங்ஙனம், மாதாவுக்கு நேர்ந்து ஒப்புக்கொடுக்கப்பெற்ற மூன்னூறும் ஆண்டுவிழாவை அது இற்றைக்குச் சுமார் முப்பது ஆண்டுகட்கு முன்னர் மிகுந்த ஆடம்பரமாகக் கொண்டாடியது. அக்காலமுதலே யாழ்ப்பாணக் கத்தோலிக்க மக்கள் தேவமாதாபக்தியில் சிறந்தவர்களென்பதற்குப் போதியசான்றுகள் பலவுள்ளன. அவற்றுள்ளே பெரிய மாதா, கொஞ்சேஞ்சி மாதா, அடைக்கலமாதா, செபமாலைமாதா, புதுமைமாதா, பரலோகமாதா, ஆரோக்கியமாதா, அன்னை மரி மாதா, உத்தரியமாதா, சிந்தாத்திரை மாதா, தேவமாதா, மாசில்லாத மாதா, லூர்துமாதா, வியாகுல மாதாஎனும் பல்வேறுசிறப்புப் பெயர்களுடன் தேவதாயார் பேரால் அவர்கள்மத்தியிலே இருந்துவருகின்ற கோவில்கள் தனிச்சிறப் புடையனவாகும்.

யாழ்ப்பாணக் கத்தோலிக்க மக்கள் தங்கள் பரலோகஅன்னையிலே எத்துணைபெரும் பக்திபற்றுதல் கொண்டுள்ளார்கள் என்பதைச் சமீபகாலத்திலே மருதமடுச் செபமாலை இராக்கினியும், பாத்திமா செபமாலை இராக்கினியும் யாழ்ப்பாணநாட்டிற்கு விஜயஞ்செய்தபோது பக்திப்பரவசமாக நடந்தேறிய மகாஊர்வல காட்சியும், ஒரே தாயின் பிள்ளைகளைப் போன்று அவர்களெல்லாம் மாதாவை வரவேற்றுப் பக்திபண்ணிய ஞானமனோகரகாட்சியும் பிரத்தியட்சமாக எடுத்துக்காட்டி நின்றன. அங்ஙனமாக, மாமரியாயின் இந்தப்புனித ஆண்டிலே யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் சகல விசாரணைப் பங்குகளிலுமே மாதாவுக்குத் தோத்திரமாக ஆங்காங்கு நடைபெற்று வந்திருக்கும் இங்கித விழாக்களுக்கெல்லாம் மங்கலகரமாக முடிசூட்டும் ஓர் மகாவைபவமாக நாமெல்லாம் நெடுநாள் ஆசித்து எதிர்பார்த்திருந்த மரியாயின் சமாகமம் இதோ வருகின்றது! சமாகமத்தைச் சிறப்பிக்கும் ஓர் அம்சமாகச் சம்பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் இன்றுமாலை ஆரம்பமாகிக் கண்கொள்ளாக்காட்சியாய் நடந்தேறவிருக்கும் ஞானோபதேசக் காட்சியும், அடுத்துவரும் மூத்தினங்களிலும் காலையிலும் மாலையிலும் ஆன்ற அறிஞர்களான குருப்பிரசாதிகள், சந்நியாசர், கன்னியர், மற்றும் கத்தோலிக்க பிரமுகர்கள் மாதாபக்தியைப்பற்றியும், ஞானோபதேசக் கல்விமுதலாம் பல்வேறுகாத்திரமிக்க விஷயங்கள் பற்றியும் நிகழ்த்தவிருக்கும் அருமையான சொற்பொழிவுகளும் மக்களையெல்லாம் கவர்ந்திழுக்குமென்பதில் சந்தேகமில்லை. கடைசியாகச் சமாகம சுபதினமாகிய அடுத்த 10-ந் திகதி ஞாயிறுவாரம் என்றுமில்லாதவிதமாய் நடந்தேறவிருக்கும் தேவாராதனைத்திருச்சடங்குகளும், மாதாவின் திருச்சுரூப மகாசுற்றுப்பிரகாரமும், யாழ்ப்பாண முற்றவெளியில் பகிரங்கமாக நிகழவிருக்கும் பிறவைபவங்களும் நம்மேற்றிராசனத்திலுள்ள கத்தோலிக்கமக்களையெல்லாம் ஒருங்கேவசீகரித்து "வாரீர் புகழ்வோம் திருமாதாவை" என்று அவர்களெல்லாம் வானோருடன்சேர்ந்து தாயாரை என்றென்றும் வாயாரவாழ்த்தவும், மனதாரப்போற்றவும் வழிபண்ணுமென நிச்சயமாக நம்பியிருக்கலாமென்க.

## ஓர் குருவானவரின் தாய்

மரியாய் ஒருகுருவானவரின் தாய். யேசுக்கிறீஸ்து நாதராகிய பிரதான குருப்பிரசாதியின் தாய். அவர் ஒரேபேறான குமாரனையிருந்தும், நித்திய பிதாவுக்கு அவரைத் திருப்பிக்கொடுக்க—ஏகமகனைத் தியாகஞ்செய்ய அவ சற்றேனும் தயங்கவில்லை.

மரியாய் தமது திருக்குமாரனின் முதற்பூசைப்பலியில் சமூகமாயிருந்தா. கல்வாரிமலையிலே, நிந்தனைச்சின்னமாக விளங்கிய சிலுவைமரத்திலே, பயங்கர வேதனை அனுபவித்து அவர் தொங்கியிருந்த அந்தமூன்று மணித்தியாலங்களிலும், மரியாய் தமதுதிவ்வியகுமாரனின் திருவுள்ளத்தோடு தம்மனதையும் ஒன்றித்துப் பலிசெலுத்தினா.

மரியாய் ஒருகுருவானவரின்மாதா. மரியாயின் இப்புனிதவருடத்திலே இது ஓர் அருமையான சிந்தனையல்லவா? ஒருகுருவானவரின் தாய் என்றமட்டில் மரியாய், தேவ பலிபீடத்தின் ஊழியத்துக்குத் தங்கள்மக்களை ஒப்புக்கொடுத்துள்ள எல்லாத்தாய்மார்களினதும் விசேஷ பாதுகாவலாளியாகத் திகழுகின்றா.

ஒருமகனை — விசேஷமாக ஒரேஒரு தனிமகனைத் தேவனுக்கு ஒப்புக்கொடுப்பதே ஒருதாயானவளின் அதிகம்பெரிய தியாகமாகும். தேவகுமாரனுகும் கிறீஸ்துநாதர் தேவமாதாமட்டில் எவ்வளவு அன்பும், நேசமும், பற்றுதலும் காட்டினரோ, அதேபோல ஒருகுருவானவரின் தாயும் அவருடைய அன்புக்கும், நேசத்துக்கும், பற்றுதலுக்கும் இலக்காகாதிருக்க முடியாது. தாய்க்கும் மகனுக்குமிடையேயுள்ள பந்தனத்தைக் குருத்துவம் இன்னுமதிகநெருக்கமாகப் பிணைக்கின்றது. தாயும் குருமகனும் ஒரேநோக்குடன் நெருங்கிய ஐக்கியபந்தன சீவியகாலத்தைக் கழிப்பதைக் காண்பது எவ்வளவோ சந்தோஷம்!

உங்கள்புதல்வரில் ஒருவரைத்தேவன் தமதுதிருத்தொண்டுக்கு அழைக்கச்சித்தங்கொண்டால் தடங்கல் செய்யாமல் ஆண்டவருக்குக் கொடுத்து விடுங்கள். உங்களது மகன் தேவ குருப்பிரசாதியாய்வர உங்களைத் தகுதியாக்கிக்கொள்ளுமாறுதேவதாயாரைப்பார்த்துத் தினமும் மன்றாடுங்கள். அந்தத் தியாகஞ் செய்ய மாதா உதவி செய்வா. அப்போது நீங்களும் ஓர்மரியாய் ஆகுவீர்கள். உங்கள்மகன் இன்னோர் கிறீஸ்து ஆகுவார்.

ஓ! எவ்வளவு பாக்கியமான சுதந்தரம்!



## சதாசகாயமாதா கோணம்

### அன்றலர்ந்த மலர்கள்

ஜோண் மன்னோர்ஸ்என்பவர் இங்கிலாந்திலுள்ள ஓர்வர்த்தககாரியாலயத்திலிருந்து வடஇத்தாலிக்கு மாற்றப்பட்டார். இந்தமாற்றம் முதன்முதல் அவருக்கு உகப்பாகத் தோன்றவில்லை. ஆனால், சிலவாரங்களின்பின்போவானளாவும் மலைத்தொடர்களும், அவற்றின் சுருட்சித்திரங்களும், அழகுற அமைக்கப்பட்ட சிகரங்களும், ஊர்த்தோற்றமும், அவற்றின்வனப்பும் மன்னோர்ஸ்என்பாருக்கு மனவசீகரத்தைக் கொடுத்தன. தூய்மையானகாற்று அவருக்கு உடல்நலத்தைக் கொடுத்தது.

அவர் தமதுமோட்டார்ரதத்தில் ஒவ்வொருநாளுந் தமதுஅலுவலகத்துக்குச் செல்லும்பாதையில் எத்தனையோ மாடமாளிகைகள், கூடகோபுரங்கள் இருந்தன. ஆனால், அவரின்கவனத்தை ஒருசிற்றில்லமே கவர்ந்தது. அதற்குள்ளநியாயம் விசேஷப்பட்டதெனச் சொல்லுவதற்கில்லை. அந்தஇல்லத்தைச் சுற்றியுள்ளமதிலில் ஒருசிறுகெபி இருந்தது. அந்தக்கெபியில் கன்னித்தாயாரின் திருச்சுரூபமொன்று அழகுற வைக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொருநாளும் ஏறக்குறைய அதேநேரத்தில் மன்னோர்ஸ் தமது காரில் செல்லும்போது, ஒருசிறுபையன் கெபியில் வைக்கப்பட்டிருந்த தேவதாயாருக்கு அன்றலர்ந்தமலர்களைச் சூட்டுவதைக் கவனித்துவந்தார். நாளடைவிலே அவருக்குப் பையன்பால் ஓர்விதஅன்பு ஏற்பட்டது. காரில் போகும்போது அச்சிறுபையனுக்குச் சலாமபோடவும், இனிப்புப்பை எறியவும் தொடங்கிவிட்டார். இனிப்புப்பையைஎடுக்கப் பையன் ஓடுவதையும், அவன்முகத்தில் ஒளிரும் சந்தோஷத்தையுங்கண்டு அவரும் மனம்பூரிப்பார். ஒழுங்காக யாதாமோர்தடையும் இல்லாமல் மூன்றுமாதகாலமாக இஃது நடந்துகொண்டிருந்தது. தாம் போகும்போது பையனுக்கு ஏதோ இனிப்புவகை கொடுக்காதுவிடல் தர்மலோபமாகுமெனக் கருதி, அவர்எப்போதும் ஏதாவதொன்று அவனுக்குக் கொடுக்கத்தவறியதில்லை. ஆனால், அவர் சிறுவனோடு ஒருபோதுங் கதைத்ததேயில்லை. என்றாலும் புன்முறுவல், கைகாட்டல், இனிப்புப்பை எறிதல், அதைஎற்றல் முதலியசிறுசம்பவங்கள் அவர்களிடையே ஒருபாரியபந்தனத்தை உண்டாக்கிவிட்டது.

ஆனால், ஒருநாட்காலை வழக்கம் போல் பையனைத் தேவதாயாரின் சுரூபத்தண்டை காணவில்லை. சற்று மலைவுற்றார். சிற்றில்லத்தின்வாசலில் தமது காரைநிற்பாட்டி, கதவிற்தட்டினார் மன்னோர்ஸ். ஓர் தளர்ச்சியடைந்த மாது கதவைத்திறந்தாள். மன்னோர்ஸ் தாம் ஆரென்றும், தாம் வந்தகாரணம் ஏதென்றும் சுருக்கமாகக்கூறினார். மனுஷியின்முகத்தில் ஆனந்தபிரபை வீசியது. "ஐயா! என்சிறுவன் பீற்றருக்கு உமதுவருகை எவ்வளவோ ஆனந்தத்தைக் கொடுக்கும்; தயவுசெய்து உள்ளேவாருங்கள்" என்றாள்.

அந்த இடம் மாசு மறுவில்லாது மெத்தப்புனிதமாக இருந்தது. அந்த அறையில் ஓர் மாசில்லாதமாதா சுரூபம் இருந்தது. அதற்குமுன்பாக நீலநிறவிளக்குஒன்று எரிந்துகொண்டிருந்தது. இதைக்கண்டதும் அவரைஅறியாமலே ஒருஅதிசயவிதஉணர்ச்சி அவரைப்பற்றியது. சிறிதுவேளையால் தமது சிறிய சிநேகிதன்பால் அவரதுபார்வை சென்றது. அந்தஒருபார்வை எல்லாம் புலப்படுத்தியது. அச்சிறுவன் இவ்வுலகில் மிகக்கொஞ்சவேளைமாத்திரம் சஞ்சரிப்பான் எனத் தோன்றியது என்றாலும் புன்முறுவலோடு அவரை ஏறெடுத்துப்பார்த்து: "நீங்கள் என்னைக் காண வருவீர்களென்பது எனக்குத் தெரியும்; உம்மைஇங்கு அனுப்பும்படி பரிசுத்த கன்னித்தாயாரிடம் நான் கேட்கவில்லையா? நான்கேட்பதை அவ மறுக்கமாட்டா என்பதும் எனக்குத் தெரிந்ததே; தயவுசெய்து உட்காருங்கள்; என்னோடு சற்றுவேளை சம்பாஷியுங்கள்" என்றான் சிறுவன்.

மன்னோர்ஸ் உட்கார்ந்தார். கன்னித்தாயாரின் பாதங்களில் அவவுக்கென ஒப்புக்கொடுக்கப்பட்ட இந்தப் புனித வருடத்தில் ஒவ்வொருநாளும் அன்றலர்ந்தமலர்களைச்சூட்டத் தான்வாக்குப்பண்ணியதாகச் சிறுவன் தனதுமழலைமொழியில் கூறினதைக்கேட்டு அவர் வியப்படைந்தார். தான் ஒருபிரியதத்த மந்திரந்தானும் கடைசியாகச் சொன்னது எப்போதெனத்தெரியாது மயங்கினார். மரியாயின் புனிதவருடத்தைப்பற்றி ஒருசிறுவன் தனக்கு நினைவூட்டுவதை நினைத்து வெட்கினார்.

"நீர் ஒரு கத்தோலிக்க கிறீஸ்தவரோ?" என்றுகேட்டான் சிறுவன்.

"ஆம்" என்று முணுமுணுத்தார் மன்னோர்ஸ். தாம் பலவருடங்களாக வேதானுசாரத்தைக் கடைப்பிடித்தொழுகவில்லை எனச்சொல்ல உன்னினார். ஆனல், சொல்லவிருப்பவில்லை.

அப்போது பீற்றர்என்னும் அச்சிறுவன்; "ஐயா, பிலிப்புச்சுவாமியார் வருகிறசனிக்கிழமை இவ்விடம் சற்பிரசாதநாதரைக் கொண்டுவருவார்; என் தாயாரும் திருவிருந்தருந்துவா; அச்சமயம் நீங்களும் சமூகமாயிருந்தால் அது எனக்கு அளப்பரும் ஆனந்தத்தைக் கொடுக்கும்" என்றான்.

"பீற்றர், நான் அந்தநாளில் இங்கேயிருப்பேன்; நானும் என்ஆண்டவரைப் பெறுவேன் என வாக்குப்பண்ணுகிறேன்" என்று கண்ணீர்உகுத்துக் கூறினார்மன்னோர்ஸ்.

சிறுவன் பீற்றர் சிரித்தவதனத்துடன் தலையணையிற்சாய்ந்தான்.

சில மணித்தியாலங்கள் சென்றபின் பிலிப்புச் சுவாமியார் பாவப்பொறுத்தல் ஆசீர்வாதமருளத் தமதுகையை உயர்த்தினார். மன்னோர்ஸ் மனந்திரும்பிப் பாவசங்கீர்த்தனஞ்செய்து ஆண்டவரின் பட்டியிற் சேர்ந்ததையிட்டு வானத்துத்தூதுவர் அகமகிழ்ந்தனர். அன்றலர்ந்த மலர்களின் காணிக்கைப் பேறு அம்மா நின்னதே!

### நேர்த்தியின் பூர்த்தி

ஆனையிறவு கண்டிறோட்டில் புதிதாக்ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அர்ச். கிறிஸ்தோப்பரை வேண்டிக்கொண்ட ஒன்பது மன்றாட்டங்கள்கிடைக்கப்பெற்றுள்ளேன். நேர்த்தியின்படிஇதைப் பிரசுரிக்கிறேன். அவரின்மகிமை எங்கும் புகழப்படுவதாக.

எம். ஞானப்பிரகாசம்
செம்பியன்பற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சியில் கத்தோலிக்க எழுத்தாளர் மாநாடு

கத்தோலிக்க தமிழ் எழுத்தாளர்களின் மூன்றாவது மாநாடு திருச்சினாப்பள்ளி மேற்றிராணியாரான சரி. வந். ஜேம்ஸ் மென்டோன்ஸா ஆண்டவரவர்கள் ஆதரவில் 1954 டிசம்பர் 27, 28, 29-ம் நாட்களில் திருச்சினாப்பள்ளியில் நடைபெறும். அவ்வமயம் மேன்மைதங்கிய பிரான்சிஸ் தியூர்சியஸ் ரோச் ஆண்டவரவர்கள் மாநாட்டைத் திறந்து வைப்பார்கள்.

மாநாட்டில் கீழ்க்கண்ட பொருள்களைப்பற்றி ஆசிரியர்பலர் பேசுவார்கள்.

(அ) பள்ளிக்கூடங்களுக்கும், கல்லூரிகளுக்கும் ஏற்ற கல்வி நூல்கள்.

(ஆ) மரியாயின் தமிழ் இலக்கியப் பாடல்கள்.

பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் பயிலும் மாணவர் எத்தகைய இலக்கியங்களைப் பயிலவேண்டும் என்னும் பிரச்சினையை ஆராய்தலே இம்மாநாட்டின் முக்கியமான பொருளாகும். பாடப் புத்தகங்கள், துணைப் பாடப் புத்தகங்கள், பொதுப்படிப்பு நூல்கள் ஆகியவை மாணவரது பலவகைப்பட்ட பருவ நிலைக்கும், மனநிலைக்கும், உளநூலுக்கும் ஏற்றவகையில் எவ்வாறு அமைதல் வேண்டும்? இந்நோக்கத்திற்குப் பொருத்தமான வகையில் கத்தோலிக்க பண்பாட்டைப் பிற்களமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள பாடப்புத்தகங்கள் யாவை? நம் சிறுவரும், இளைஞரும் இப்பண்பில் வளர்தற்கு ஏற்றநூல்களை எழுதுமாறு எழுத்தாளர்களை ஊக்குவது எவ்வாறு? என்பனவற்றையெல்லாம் ஆராய்தல் வேண்டும்.

கத்தோலிக்க சிறுவர்களின் படிப்பு ஆர்வமும், சமயஅறிவை நிலைக்கச் செய்வதற்குப் பள்ளிநூற் கூடங்கள் பயன்படும் விதமும் ஆகியவைபற்றி விவாதிப்பதும் இம்மாநாட்டு நிகழ்ச்சிநிரலிற் சேர்க்கப்படும். பேச்சாளர்கள் தொடக்க நிலை, நடுநிலை, உயர் நிலை, கல்லூரி வகுப்புகளுக் கேற்ற வகையில் இப்பொருள்பற்றி ஆராய்ந்து பேசுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஏனெனில், அவ்வாறு செய்தால்தான் தமிழில் கத்தோலிக்க கல்வி இலக்கியங்கள் தோன்றுவதற்கு மாநாடு உண்மையான உதவி புரிந்ததாகும். போதனாமுறைக் கல்லூரிகளையும், பள்ளிக்கூடங்களையும், கல்வித்தொடர்பான பிறநிலையங்களையும் பொறுப்பேற்று நடத்துபவரும், கத்தோலிக்க பள்ளிக்கூடங்களுக்கும், கல்லூரிகளுக்கும் பொருந்திய பாடப் புத்தகங்களை எழுதியவரும், இளைஞர்களுக்கு நல்வாசகங்கள் எழுதுவதில் ஈடுபட்டு உழைப்பவர்களும் இம்மாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

மரியாயின் ஆண்டினைக் கொண்டாடுவதற்காகத் தமிழில் மரியாயின் பாடல்களைப்பற்றிச் சொற்பொழிவாளர்கள் சொற்பெருக் காற்றுவார்கள். தமிழிலுள்ள மரியாயின் இலக்கியங்கள் உலகில் மிக்கவளமும், மதிப்பும் உடையவைகளாகும். மாநாடு டிசம்பர் 29-ம் நாள் நடைபெறும் பொதுக்கூட்டத்துடன் முடிவுபெறும். அவ்வமயம் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தமிழில் "மரியாயின் பாடல்கள்" என்பது பற்றிச் சொற்பெருக்காற்றுவார்கள். புகழமைந்த மரியன்னைப்புலவர் பண்டித M. P. மஸ்கரனுஸ் அவர்கள் தமிழ்இலக்கியக் கழகத்தினரால் சிறப்பித்துப் பாராட்டப்படுவார்கள்.

தமிழ்இலக்கியக் கழகத்தின் பரிசு பெறுதற்பொருட்டு நல்லூர் சுவாமி. ஞானப்பிரகாசரைப்பற்றி இரு ஆராய்ச்சிநூல்களும், இரண்டு கத்தோலிக்க கதைநூல்களும், இரண்டு கத்தோலிக்க திருத்தொண்டர்களின் வரலாற்று நூல்களும அனுப்பப்பட்டுள்ளன. இவற்றைஆராய்ந்து தகுதியுள்ளவைகளின் ஆசிரியர்களுக்குத் தமிழ் இலக்கியக்கழகத்தினரால் மகாநாட்டில் பரிசுவழங்கப்படும்.

திருச்சினாப்பள்ளி R. C. போதனாமுறைப் பாடசாலைத்தலைவர் வண. லூர்து சுவாமியவர்கள் மாநாட்டுக்குரிய வசதிகளையும், ஏற்பாடுகளையும் செய்துதருவார்கள். மாநாட்டுக்கூட்டங்கள் R. C. போதனாமுறைப் பாடசாலையில் நடைபெறும். மாநாட்டுக்குவரும் பொதுமக்கள் அப்பள்ளியில்தங்குவதற்கு வசதிகள்செய்துதரப்படும். அர்ச். சின்னப்பர்குருமடத்தலைவரவர்கள் அக்குருமடத்தில் 30 குருமார் தங்குதற்கு வசதிசெய்துதருவதாக அன்புடன் இசைந்துள்ளார்கள். மாநாட்டுக்கு வரும் பெண்கள் தங்குவதற்குக் கன்னியர்மடத்தில் வசதிசெய்துதரப்படும்.

மாநாட்டு உறுப்பினர்களாகக் கலந்துகொள்ள விரும்புகிறவர் டிசம்பர் 5-ம்நாளுக்குமுன் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

செயலாளர்,
தமிழ் இலக்கியக் கழகம்,
52, புதுக்கிராமம்,
[illegible]

## ஞானோபதேசக்காட்சி ஆரம்பகீதம்

இராகம்-மோகனகல்யாணி] [தாளம்-ஆதி

பல்லவி

; சநி, தா சரீ கா; பமகா |
வாழ்க வாழ்கவே மரியே
; கபா தசா சநிதாபமகரி || கரி
மகிழ்ந்துநாம் பா-டினோம்துதியே

அனுபல்லவி

; கபா தசா சநிதா, தசா |
பாழும் சென்ம பா-வம் நீங்கிப்
; நிநீ சநீ நீ, த பமகா ||
பாரினிலே யுற்ப வித்தீர்
; காபா தா சா, நி த த சரி |
நாளு மிவ் வேத உண்மையின்
; சா, சரிச சா, நி ததசா ||
ஞா-னத்தை ஏற்றிப்போற்றி
; ததா சசா ரீரீ கா கா |
துதித் தனம் செல்வத் தாயே
; மக கா கரிரீ சா நித பப மம || கரி
தூ-ய பூம் பா - - த-மே- நிதம்

சரணம்

; பபா பபா பா, த பமகா |
பவ உல கமே மீட்க
; கதா பதா பா மாகாரீ ||
பர னைத்தந் த பாக்யஞ்சேர்
; சரீ கரீ சா, ரி சநிதா |
தேவதாய் நீர் அன்றோ
; ததா சரீகா பமகா ||
தினம் பணிந்தோம் உமையே

நீச பாவக் கறைகள் நீக்கி
நீணிலத்தை ரட்சை செய்ய
நேசமோடு சீவன் ஈந்த
நிகரிலாத் தேவ தேவன்
சித்தமோடுழைத்த எங்கள்
சீவ ரட்சகியே! தாயே! நிதம்—
வாழ்க!

(2)

நல்லமனம் வாக்குக் காயம்
நாளும் உமக்கேயென்று
கல்லுங் கனியப் பாடிக்
காணிக்கையாகவே தந்தோம்.
எங்கள் மேற்றிராசனத்தில்
இயற்றிய சமாகமத்தை
மங்களமாகச்செய் வீரே!
மாதாவே! என்றும் ஞான
வரங்களுக்கோர் வாய்க்கால் நீர்
மலர்ப்பதந் தொழுவோம் உமையே
நம்பி — வாழ்க!

(3)

வானும் பூவும் வாழ்த்தும் ஞான
மகிமையின் தாயே! கற்பின்
தேனமர் லீலி மலரே!
திருப்பதமே தஞ்சம்
உலக மெல்லாமே போற்றும்
உந்நதமானவுன் ஆண்டில்
அலகையின் அடிமை நின்றே
அனைத்தையுங் காக்கவென்றே
எம்பிரானன் றீந்த தாயே
என்றென்றுமே வேண்டினோம் நாமே
—வாழ்க!

(பாட்டு: பண்டிதர் கே. ரி. ஞானப்பிரகாசம் — இராகம்: ஆசிரியர் பி. எம். வேதநாயகம்.)

## மாதா சிரிக்கவில்லை!

— அழுது —

1

மாதா சிரிக்கவில்லை ஏனடாதம்பி? — அதன்
மர்மத்தைக் கூறிடுவேன் கேளடாதம்பி
வேதாளம் வெற்றியிலே தாண்டவமாட — அவள்
வேதனை அதிகமடா காரணம்ஈதே!

2

ஊற்றாய் இருப்பவளை எண்ணினோமில்லை — அவள்
ஊழியத்தை வாழ்வினிலே நண்ணினோமில்லை.
யாற்றுந்தாய் போலஎண்ணி வாழ்ந்துவிட்டோமே — பொல்லா
வஞ்சகப்பேய்க் கண்ணியிலே வீழ்ந்துவிட்டோமே!

3

மாயப்பொடி நம்முகத்தில் பூசினோம்அள்ளி — முல்லை
மல்லிகையில் மாலைசெய்தோம் மொட்டுகள்கிள்ளி
காயம்நிலை நிற்குமென்று எண்ணிவிட்டோமே — தூய
கன்னியின் வனப்பில்மனக் கருத்திழந்தோமே!

4

ஆடை அணிகளிலே காசைஅழித்தோம் — புது
அத்தரிலும் புனுகிலுமே காலம்கழித்தோம்.
கோடையெனும் எம்மனத்தைக் கொண்டலாக்கிடும் — அன்னை
கூறுதபம் ஏறெடுத்துப் பார்த்திலம்தம்பி!

5

கற்புநெறி மானமெல்லாம் போனபின்புநாம் — விட்டுக்
கதவுகளைப் பூட்டுவதால் என்னபுண்ணியம்?
பொற்புடைய மாமரியாள் புண்ணியமெல்லாம் — கேட்டால்
போதுமட்டும் ஈந்திருப்பாள்; இல்லைஎன்னாளே!

6

சொல்லுவதை வாழ்வினிலே செய்வதைக்காணோம் — முகத்
துதிகளுக்கே நம்மனதைப் பறிகொடுத்தோமே
நல்லவரைப் போல்நடிப்போர் கல்லறைஉள்ளம் — எந்த
நாளினிலே மாறிடுமோ நாமறியோமே!

7

குடும்பப் பிரிவுகளே கூடுதேகோட்டில் — கைக்
கூலி பெறுபவர்கள் கொஞ்சமோநாட்டில்?
இடும்பன் தலைவாசலிலே நாங்கள்நிற்கின்றோம் — அவன்
ஏற்றுகொடி சுத்தியலும் கத்தியும்பாரீர்!

8

கொலைகளவு சதிகள்எல்லாம் கூடுதேதம்பி — நஞ்சு
கொண்டநூல்கள் தம்விஷத்தைக் கொட்டுதேதம்பி
நிலையான நீதிசமா தானம்உண்டாக்க — எங்கும்
நெருப்பெரியும் குண்டுகளே தஞ்சம்என்றாரே!

9

தேரையொடு பாம்புபோல வாழ்வதேஅன்றிப் — பிறர்
சிநேகமெனும் நற்குணத்தைச் சிந்தைகொண்டிலோம்
பாரை,வெடி யாலிளகாப் பாறைகள்எல்லாம் — தாயின்
பாசமெனும் வேரினாலே ஏனிளகாதோ?

10

மக்கள்கூட்டம் ஒன்றுசேர்ந்து கைகளைநீட்டி — "எங்கள்
மாதவே!" என்றகுரல் கேட்டிடும்போது
பக்கெனவே சிரித்திடுவாள் பந்தயம்போடும் — அந்நப்
பாக்கியத்தை அளிப்பவளும் மோட்சராணியே!

## ஓர் அரிய சந்தர்ப்பம்!

பெற்றோரே! பிள்ளைகளே! கேளுங்கள்: நிகழும் ஐப்பசி 10-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-10 மணிக்குக் கொழும்பு மேட்டுத்தெரு அர்ச். அன்னம்மாள் பாடசாலை மாணவிகளால் வானொலிமூலம்,

"ஷீலாவின் அழைத்தல்"

என்னும் ஓர் அரிய சம்பவம் ஒலிபரப்பப்படவிருக்கிறது. ஓர் பெண்ணின் அன்பு தத்தளிக்கின்றது, தைரியமடைகின்றது, கஷ்டங்களுக்கு ஆளாகின்றது. மிகுதியை வானொலிமூலம் கேட்டு அறியுங்கள். ஓர் அரிய சந்தர்ப்பம் கேட்கத் தவறாதீர்கள்!

● முன்னில்லாத பெருந்தொகையினராக இவ்வாண்டின் முதலெட்டுமாதங்களிலும் 25லட்சம் யாத்திரிகர்கள் லூர்துதிருப்பதியைத் தரிசித்திருக்கின்றார்கள். இவர்களில் நாற்பதினாயிரம் பேர்வரை ஆகாயவிமானங்களில் அங்கு சென்றார்கள். இவர்களிலும் அரைவாசிப்பேர் பிரித்தானியதீவுகளிலிருந்து அங்குபோயிருந்தார்கள்.

## சின்னக்குறிப்பிடம்

நமது கத்தோலிக்க பாடசாலைகளிலே பாவிக்கப்பட்டு வருகின்ற சத்தியவேத போதகச் சுருக்கத்தின் பொழிப்பாகிய "சின்னக்குறிப்பிடம்" காலத்துக்கேற்ற நல்லமுறையிலே, பிள்ளைகளுக்கு அதிகம்கவர்ச்சியும், நல்ல விளக்கமும அளிக்கக்கூடியவகையிலே திருத்தமாகவும், சிறப்பாகவும் நம் அச்சகத்திலிருந்து வெளிவந்திருக்கின்றது. இதிலே அனுதின சுகிர்த செபங்கள்ஆகியன பிள்ளைகள் இலகுவில் வாசிக்கக்கூடிய பெரியஎழுத்துகளிலே தெளிவாக இருக்கின்றன. சத்தியவேதபோதகச் சுருக்கத்தின் பொழிப்பு பதினைந்துபிரிவுகளாக வகுக்கப்பெற்று, ஒவ்வோர்பிரிவும் அதனுடன் சம்பந்தப்பட்ட படங்களைக் கொண்டிருக்கின்றன. பார்க்கும் போதே ஞானஉணர்ச்சியைப் பிறப்பிக்கக்கூடிய இந்தப்படங்களின் விளக்கம் வேறாகத் தரப்பட்டிருக்கிறன. ஆதலினால் இந்தப்புதிய சின்னக்குறிப்பிடமானது எளிதிலே பிள்ளைகள் ஞானோபதேசப்பாடம் கற்றுக்கொள்ளவும், ஆசிரியர்கள் அவர்களுக்கு இலகுவிலே ஞானோபதேசப்பாடம் கற்பிக்கவும் மிகவாய்ப்பானதாகுமென நம்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்

## வாழ்த்திப் போற்றிடுவோம்

'ஜெயம்'

1

பாலன் யேசுவைப் பெற்றவளைப்
பாலர் நாங்கள் போற்றிடுவோம்
காலம் முழுதும் கன்னிகையைக்
கையெ டுத்துநாம் போற்றிடுவோம்

2

பாவிக் கடைக்கல மானவளைப்
பரிபூ ரணியைப் போற்றிடுவோம்
சூசை விரத்தன் பத்தினியின்
சொர்ண பாதம் போற்றிடுவோம்.

3

துன்பப் படுவோர் ஆறுதலைத்
தூய்மைக் கனியைப் போற்றிடுவோம்
அன்பின் உருவம் ஆனவளை
அன்பு ருகநாம் போற்றிடுவோம்

4

காலைப் போதின் தாரகையைக்
கருணைத் தாயைப் போற்றிடுவோம்
ஞாலம் முழுதும் காப்பவளை
நாளும் வாழ்த்திப் போற்றிடுவோம்

## அண்ணா சொல்லுவது:

அருமைச் சகோதரங்களே!

விஸ்கொன்ஸன் அமெரிக்காவில் உள்ள ஓர் பட்டணம். அங்கு ஓர்பெண் 1936-ம் ஆண்டு மாசிமாதம் 21-ந் திகதி 28 டலர் நாணயங்கொண்ட ஓர் பணப்பையை இழந்துபோனுள். அது அவ்வூர்க் கட்டளைச் சுவாமியாருக்குக் கலிபோணியாவிலிருந்து திரும்பி வந்தது.

அந்தப் பணப்பையை இழந்தவள் சாள்ஸ் போர்த்துருத்துவின் மனைவி. பயணம் செய்யும் பொழுது பஸ்ஸில் அதை இழந்து விட்டாள். பதினெட்டு வருடங்களின் பின் அதைத் திருப்பி அனுப்பியவர் அதில் ஓர்கடிதமும் வைத்திருந்தார். அந்தக் கடிதத்தில் இவ்வளவு காலத்துக்கும் உரிய வட்டியும் வைத்திருக்கிறேன் என்று எழுதி, நாற்பது டலர் அனுப்பியிருந்தார்.

கட்டளைச் சுவாமியார் அப்பணத்தை முன்னர் இழந்துபோனவளுடைய மகளுக்குக் கொடுத்தார். ஏனெனில், சாள்ஸின் மனைவி இறந்துபோனுள். எந்தப் பொருளும் அதன் சொந்தக் காரருக்குச் சேரவேண்டும். எவ்வளவு காலஞ் சென்றாலும் உத்தரிப்புக் கடன் செய்தே ஆகவேண்டும். இச்சம்பவத்தில் வட்டியுடன் பணம் அனுப்பியதை நன்கு அவதானியுங்கள். சுபம்!

உங்கள் அன்புள்ள அண்ணு

## அருளும் நேசனும்

(நேரம் மாலை 5 மணி. விளையாட்டு உடை அணிந்து அருள் தனது வீட்டிலிருந்து புறப்பட்டு வீதியிலே சென்றுகொண்டிருக்கிறுன். அடுத்தவீதியில் வசிக்கும் நேசன் புத்தாடை அணிந்து மிகவும் விரைவாக வந்தவன் அருளைச் சந்திக்கிறுன். இருவரும் ஒரேவகுப்பு மாணவர்கள்.)

அருள்: என்ன நேசா! சினிமாவிற்குப் போல் இருக்கிறது. அப்படித்தானே!

நேசன்: உனக்கு என்ன குறை? நீ செல்லப் பிள்ளை. சதா சினிமா நினைவுதான். அதுசரி. நீ இன்று பாடசாலைக்கு வரவில்லைப்போல் இருக்கிறது. அதனுல்தான் இப்படிக் கேட்கிறுய் (அலுப்புடன் கூறுகிறுன்.)

அருள்: ஏன் நேசா இப்படி அலுத்துக் காணப் படுகிறுய்? வகுப்பிலே இன்று ஆசிரியர் ஏதாவது சொன்னுரா?

நேசன்: ஆம்சொன்னுர். மரியாயின் புனித வருடக் கொண்டாட்டத்தை முன்னிட்டு வருகிற ஐப்பசிமாதம் 10-ந் திகதி மரியாயின் சமாகமம் நடைபெறவிருக்கிறது என்று சொன்னுர்.

அருள்: (இடைமறித்து) அது மாத்திரமல்ல, 8, 9, 10-ந் திகதிகளில் சம்பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் ஞானுேபதேசப் பொருட்காட்சி ஒன்றும் நடக்க விருக்கிறதாமே.

நேசன்: என்ன அதற்குள் ஆத்திரப் படுகிறுயே. சமாகமம் நடக்கும் என்று அல்லவா சொன்னேன். அப்போது மாதாவுக்குக் காணிக்கை வைக்க ஞானப் பூச்செண்டு......

அருள்: ஆம், அந்தப் பூச்செண்டு நானுக்தானே......

நேசன்: ஏன் அருள் இவ்வளவு ஆத்திரம்? நான் சொல்வதைக் கேட்டுப் பிறகு பேசு.

அருள்: கோபியாதே நேசா. என்ன சங்கதி? சொல்கேட்போம்.

நேசன்: நீயும் அந்தப் பூச்செண்டு என்றுயே. அதை நமது வகுப்பு மாணவர்கள் ஒன்று சேர்ந்து விசேஷ விதமாய்த் தயாரித்துக் குறித்த கருத்துக்காக—விசேஷமாய் மனிதரின் பாவ தோஷங்களினுல் நொறுங்குண்டிருக்கும் எமது ஆண்டவரின் திரு இருதயத்திற்கு நிந்தைப் பரிகாரமாகத் தேவதாயார் மூலமாகக் காணிக்கை வைக்க எண்ணியிருக்கிறேும்.

அருள்: அதற்கு ஏன் இவ்வளவு ஆடை அலங்காரம்?

நேசன்: அதையும் சொல்லுகிறேன் சற்றுப் பொறு. இப்போது சொன்னேன் அல்லவா ஞானப் பூச்செண்டு என்று. அதை இன்றைக்கே இப்போதே ஆரம்பித்துவிட்டோம். அதற்காக 6 மணிக்கு மாணவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து பரிகாரச் செபமாலை சொல்லப்போகிறேும். அதற்குத்தான் இவ்வளவு அலங்காரமும்.

அருள்: இதைச் சொல்லத்தானு எங்கேயோ எல்லாம் சுற்றிச் சுழன்று வந்தாய்?

நேசன்: எதையும் நீ சொல்லவிட்டால் தானே. (பிறகு தனது கைக்கடிகாரத்தைப்பார்க்கிறுன்; நேரம் 5-30.) அது இருக்கட்டும், நீ இப்போது எங்கு போகிறுய்?

அருள்: இனி எங்கு போவது? போகவிருந்த இ[illegible] காமல் மறித்து விட்டாயே. உனது கேள்வியைப்பார்த்தால் உங்கள் ஞானப் பூச்செண்டில் எனக்குப் பங்கில்லைப் போல் இருக்கிறது!

நேசன்: ஏன் இல்லை. அப்படியானுல் வா கோவிலுக்குப் போவோம்.

அருள்: உடுப்பு மாற்றுமலா? வா, எனது வீட்டிற்குப் போய் உடுப்புமாற்றிக் கொண்டு போவோம்.

நேசன்: சீக்கரம் புறப்படு. நேரம் போய் விட்டது. (சற்று வேளையின் பின் அருளின் வீட்டிலிருந்து கைகோத்தபடியே இருவரும் கோயிலை நோக்கி விரைந்து செல்லுகிறுர்கள்.)

—அருள்நேசன்

## சுசீலாவும் குணமும்

சனிக்கிழமை நேரம் 4மணி. ஆசனக்கோவில் வடக்கு வீதிவழியாகச் சென்றுகொண்டிருந்தேன். சுசீலாவும், நற்குணமும் அவ்வீதி முடிந்து பழைய சம்பத்திரிசியார் கல்லூரி வாசலில் நின்று நாலுபக்கமும் பார்த்துக் கொண்டு நின்றுர்கள். காட்டில் வழிதப்பியவர்கள் போல் திகைத்து நின்றுர்கள்.

என்னைக் கண்டதும் குணம் ஓடிவந்தான். ''காட்சி எங்கே நடக்குது? ஒருகால் காட்டுங்க'' என்றுன். பெயர்களை அறிந்து கொண்டு,

என்ன காட்சி தம்பி?

அந்தச் சமாகமக் காட்சி, ஞானுேபதேசக் காட்சி. நாங்கள் இப்பதான் பஸ்ஸிலே வந்தோம், வழிதெரியாது.

எங்கேயிருந்து வருகிறீர்கள்?

யார், நாங்களா? கொக்குவிலிலிருந்து.

உங்களை வாத்தியாரா கூட்டிக் கொணந்தார்?

இல்லை, எங்கட அன்ரி பட்டணத்திலே; அங்கே போனேம்; அவையள் எல்லாம் காட்சிபார்க்க வந்திட்டினம்; பின்னை அக்காவும், நானும் இங்கே வந்திட்டோம்.

இதற்கிடையில் கல்லூரிவாயிலை அடைந்து விட்டோம். கொடிகளையும், சிகரங்களையும், சோடினைகளையும் பார்த்துவிட்டு, ''நல்லவடிவாய் இருக்குது'' என்றுன் குணம். சுசீலா இரு கன்னியாஸ்திரிமாருடன் வந்துகொண்டிருந்த பிள்ளைகளைப் பார்த்துக் கொண்டு நின்றுள்.

அக்கா! வாவென்; இல்லாட்டா விட்டிட்டுப் போறம்.

இதுகள் யார்? (பிள்ளைகளைக் காட்டிக் கேட்டான்.)

எதுகள்? அவர்களா? உங்களைப் [illegible] பிள்ளைகள். சிஸ்றர்மாருடன் காட்சிபார்க்க வருகிறுர்கள்.

இவை எங்கை இருக்கிறவை?

உதுகள் யாழ்ப்பாணத்திலே அக்கா. நான் இடைமறித்து ''அந்த மண்டபத்தில் நிற்கிற சிஸ்றர்மார்தான் யாழ்ப்பாணத்தில் இருக்கிறவர்கள். இளவாலையிலும் இருக்கிறுர்கள். பாத்திமா கோயிலடியிலும் இருக்கிறுர்கள். தங்கைச்சிகண்ட சிஸ்றர்மார் அச்சுவேலியிலே இருக்கிறவர்கள். எல்லாரும் படிப்பிக்கிறவர்கள்.''

எங்கே காட்சி? என்றுன் குணம்.

என்ன முட்டாள் கேள்வி! காட்சிச் சாலையில் நின்றுகொண்டு காட்சி எங்கேயாம்.

இந்தாபார்! இதுதான், விசுவாச மந்திரத்திலே சொல்லப்பட்டதெல்லாம் படங்களிலே விளக்கியிருக்குது. ஒவ்வொன்றையும் பார்த்து, எழுதியிருப்பதை வாசித்து விளங்கிக்கொள்ளலாம்.

இது கீறினது யார்?

அந்தா எழுதியிருக்குது, பார்த்து வாசியேன். நல்லவடிவான படம். சரியாய் மெய்மையான ஆட்களைப்போல் இருக்குது.

இந்தா பாலன் பிறந்திருக்கிறுர். நத்தாலுக்கு இப்படித்தான் வீட்டிலே நாங்கள் செய்து வைத்தோம். அது மட்டையிலே கீறி இருந்தது. நாங்கள் அதைவெட்டி ஒட்டிக் குடில்செய்து வைச்சோம். அதிலே மூன்று சம்மனசு, மூன்று ஆடுகள், இடையர், மூவிராசாக்கள் எல்லாம் இருக்குது. வெட்டிறநேரம் அக்கா ஒரு இராசாவுடைய மூக்கை வெட்டிப் போட்டா. புறகு அதை நான்தான் ஒட்டினது.

சுசீலா— தம்பி பார்த்தது போதும், வா அங்கே போவோம்.

குணம்— இந்தா பாரக்கா! மோட்சம், நரகம் இருக்குது. பேய்க்குட்டி கூத்தாடுது.

சுசீ— உன்னைப் போல...

குணம்—உம்...நீங்கதான் அப்பிடி. நான் நல்ல சம்மனசு அல்லோ!

சுசீ— அதென்னங்க அது? கூட்டுக்குள்ளே அடைபட்ட ஆட்கள் மறியல்வீடா? வெள்ளை உடுப்பிலே புள்ளி போட்டிருக்குது. ஒரு ஆளைச் சம்மனசு மேலே கொண்டு போகுது.

குணம்— அதுதான் எங்களுக்குச் சுவாமி சொல்லித் தந்தவர், உத்தரிப்புஸ்தலம். அந்தப்புள்ளி அற்ப பாவத்துக்கு அடையாளம். பாவத்துக்கு உத்தரித்தபின் மோட்சத்தை அடைவார்கள்.

தம்பி உனக்கு ஞானுேபதேசம் கரைந்தபாடமாய் இருக்கே. நன்றுய்ப் படிக்கிறீரோ.

(அடுத்த பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(குணம் தமக்கையின் காதில் ஏதோ சொன்னான்)

சுசீ— இப்ப ஒன்றுஞ் செய்ய முடியாது தம்பி, சும்மா இரு;

நான் என்னவென்று விசாரித்தேன்.

குணம்— தண்ணி விடாய்க்குது.

வாருங்கள் போய்ச் சோடா குடிப்போம், கடைக்குப்போய் ஒவ்வொருவருக்கும் இரண்டுவடையும், வாழைப்பழமும் வாங்கிக் கொடுத்தேன். குடிப்பதற்கு என்னசோடா வேணும் என்றதற்கு, குணம் ஐஸ்கிறீம் பாத்திரத்தை எட்டிப் பார்த்தான். குழந்தை அல்லவா? மூன்று ஐஸ்கிறீமுக்கு ஆடர் கொடுத்தேன். குணம் ஐஸ்கிறீமைக் கையில் எடுத்தவுடன் ஆ! ஊ!! என்று நடுங்கத் தொடங்கினான்.

சுசீ— சட்டையிலே ஊத்தப் போறார் தம்பி, நாளைக்குச் சுற்றுப் பிரகாரத்துக்கு வேறே சட்டையில்லை.

குணம்— அது கரைய முந்தி நான் சாப்பிட்டு விடுவேன்.

காசைக் கொடுக்கப் போக, "இல்லை நாங்கள் கொடுக்கிறோம்; உங்களுக்கும் சேர்த்துக் கொடுக்கிறோம்" என்றான் குணம்.

அவனுடைய தாராள குணத்தை மெச்சிவிட்டு, "நாளைக்குக் காட்சி பார்க்க வரும்போது அதைக் கைச் செலவிற்கு வைத்துக் கொள்ளுங்கள்; இன்றைக்கு நான் கொடுக்கிறேன்" என்றேன்.

அப்பொழுது பெரியகோவில் மணி கேட்டது. நிகழ்ச்சி ஒழுங்கில் தேவ நற்கருணை ஆசீர்வாதம் என்றிருந்தது. "இப்பொழுது ஆசீர்வாதத்திற்கு நேரமாயிற்று, வாருங்கள் போவோம்" என்றேன.

குணம்— அதுக்குப் பிறகு என்ன இருக்கோ தெரியாது.

உபந்நியாசமும், அதன்பின் படக் காட்சியும் இருக்கும்.

குணம்—மெத்த நல்லது, நல்ல படமாய் இருக்குமோ?

சுவாமி காட்டுகிற தல்லவா? நல்ல படமாய்த்தான் இருக்கும்.

சுசி— பாட்டு?

பாட்டுமிருக்கும்.

அவ்வேளை சுசீ, "இந்தா வாறு அன்ரி" என்று ஓடிக் கோயில் வாசலில் நிற்கையில், பிள்ளையுடன் நின்ற அன்ரியை அடைந்தாள். குணம் என்னையும், அன்ரியையும் பார்த்தான்.

இவர்தான் எங்களுக்குக் காட்சி விளங்கப் படுத்தினது எனறான். அன்ரி சிரித்தாள்.

சுசீலா "இவர் யார்?" என்று அன்ரியைக் கேட்டாள்.

என் இருகைகளையும் பிடித்துக் கொண்டு கேட்டான் குணம், "உங்கட பேர் என்ன?"

எனக்குச் சிரிப்புவந்தது. "ஏன்?"

இல்லை, வேணும் சொல்லுங்க.

நான்தான் உங்களை வழிபார்த்து நின்றேன்.

அண்ணாவா? என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் சுசீலா.

அதற்குள் நான் மறைந்துவிட்டேன்.

—எம். ஜெயம்

## கண்டு பிடியுங்கள்

(தேவ தாயாரின் ஒரு திருநாளில் ஓர் விசேஷம் இதில் மறைந்திருக்கிறது. கண்டுபிடியுங்கள்.)

1. பொற் காசு பரிசில் கிடைத்தது.
2. பஞ்சியோ பாராது ஓடினான்.
3. தங்கும் இடத்தை முதல் அடைந்தான்.
4. இலாபத்தைக் கண்டான்.
5. அலன் என்பவன்.
6. அவனுடன் பெற்றதை.
7. மண்ணில் வைத்து.
8. இரட்சகர் அருளைக்
9. கண்டு துதித்தான்.

க. ஜேனேவா
தி. கு. கன்னியர் மடம்
யாழ்ப்பாணம்.

1. ஐந்தாம் ஜோர்ஜ் அரசரின் ஞாபகார்த்த கட்டடம் இலங்கையில் எவ்விடத்தில் கட்டப்பட்டிருக்கின்றது.?

2. சாதாரண கோழிமுட்டை ஒன்றின்நிறை என்ன இருக்கும்?

3. எந்த மரத்தின்நிழல் தேகசுகத்துக்கு ஏற்றது?

4 அர்ச். சவேரியார் யார்? அவர் தேகம் எங்கே வைக்கப்பட்டிருக்கிறது?

5. ஓர் நத்தை இரவில் 3 அடிஏறிப் பகலில் 2 அடி சறுக்குகிறது. 30 அடி உயரமான கம்பத்தைஏற எத்தனைநாட்கள் செல்லும்?

ஏ. எம். போன்ராஜா
காவெட்டி, வதிரி

## கணிதப்பகுதி

ஏதாவது மூன்று இலக்கம்உள்ளஓர் எண்ணை எழுதும்படி உனது சிநேகிதனைக் கேள், பிறகு அந்தஎண்ணை அடிதலைமாறி எழுதும்படி சொல். பின்னர் அவ்விரணடிலும் பெரிய எண்ணிலிருந்து சின்ன எண்ணைக் கழிக்கச் சொல்லு அதன்மேல் அந்தஎண்ணின் வலதுபுற இலக்கம் என்ன என்று கேட்டறிந்துகொணடால் அவனுக்குக் கழித்து வந்த எண்களையே நீசொல்லக் கூடியவன் ஆவாய். எப்படி? முதல் எழுதப் பட்ட எண்ணையும், அதன் அடிதலை மாறி எழுதிய எண்ணையும் பெரிதிலிருந்து சிறிதைக்கழிக்கும் போது நடுஇலக்கம் எப்போதும் 9 ஆகவே இருக்கும். அதனால் நீ கேட்டு அறிந்த வலதுபுறஇலக்கத்தை 9-இல் இருந்து கழித்துவிட்டால் முதல் இலக்கம் வரும். பிறகு நீ கழித்துவந்த முழுஎண்ணையும் சொல்லிவிடலாம்.

உதாரணமாக:—

| | |
|---|---|
| சிநேகிதன் எழுதிய இலக்கம் | 623 |
| அடிதலைமாறி எழுதிய இலக்கம் | 326 |
| கழித்துவிட்டபின் | 297 |

நடுவிலுள்ள 9-இல்இருந்து வலதுபுற இலக்கத்தைக் கழித்தால் முதல் இலக்கம் 2 அல்லவா?

— ஜே. ஏ. ஜீ.

## எலிகளின் மகாநாடு

"எல்லாரும் பொன்பூண என்மகளோ பார்த்திருப்பாள்?" எல்லாரும் மகாநாடு கூட எலிப்பிள்ளைகளா பார்த்துக்கொண்டு இருப்பது? அன்று கானக மாளிகையில் என்றும் இல்லாத பெரும் ஆரவாரம். அதற்குக் காரணம், எலிகள் மகாநாடு ஒன்று கூடியதுதான். அதற்கு நாட்டெலி, வீட்டெலி, காட்டெலி, வட்டெலி, சுண்டெலி, வெள்ளெலி ஆகியாம் பலசாதி எலிகளும் பெருந்திரளாக வந்து அங்கு வரிசையாக அமர்ந்திருந்தன. காட்டுப் பூனைகள் ஆகியன இடையிலே வந்து விழுந்து மகாநாட்டைக் குழப்பாவண்ணம் எலிப் பட்டாளம் ஒன்று துப்பாக்கியும் கையுமாய்ச் சூழவரக் கால்மைல் தூரத்துக்கு அணிவகுத்து நின்றன. காலங்கண்ட வெள்ளெலி ஒன்று மகாநாட்டுக்குத் தலைமை வகித்து, அங்கு சமுகந்தந்த எலிகளையெல்லாம் அனபாகவரவேற்று, அவர்களின் ஐக்கியத்தைப் பாராட்டி, "ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு" எனப் பலவாகச் சில கூறியபின், தயவுசெய்து அரசியல் விஷயமாகமாத்திரம் அங்கு யாதொன்றும் பேசாதிருக்கும்படி எல்லோரையும் கையெடுத்து பணிவாகக் கேட்டுவிட்டு ஆசனத்தில் அமர்ந்தது.

அதன்மேல் "எலிகளும், பூனைகளும் எவ்வாறு சமாதானமாக வாழ்வது" என்னும் பிரச்சினைபற்றி நெடுநேரம் பேசிக்கொள்ளப் பட்டது. இது விஷயமாய்ப் பெரும் வாக்குவாதம் முதலாய் ஏற்பட்டது. "[illegible]வம், பூனைகளில் ஒரு குற்றமும் சொல்ல இடமில்லை; அவைகளை வளர்க்கும் வீட்டுக்காரரே அவற்றை வளர்த்து எங்களைக் கொல்ல[illegible] குற்றஞ் [illegible] பூனைகள்

எலிகளின் சமாதான மகாநாடு ஒன்று நடத்தினால் நல்லது என்று இரண்டு மூன்று எலிகள் ஆலோசனை கூறின. அந்த மகாநாட்டுக்கு வரும் எலிகளிலே பூனைகள் வாய்வைக்க மாட்டா என்பதற்கு நம்பிக்கை என்ன? பூனை எலி பிடிக்கும் என்று பள்ளிப் பிள்ளைகள் படிப்பது உங்களுக்குத் தெரியாதா? என்று வேறு சில எலிகள் கூறி அந்த யோசனையை நிராகரித்தன. பூனைகளை நாடு கடத்தும்படி கேட்டு உள்நாட்டு மந்திரியிடம் ஒரு தூதக் கோஷ்டி அனுப்பினால் சிலவேளை கருமம் வெற்றியாகும் என்று சில எலிகள் ஆலோசனை கூறின. வேறு சிலஎலிகள் அது நல்ல யோசனைதான் என்று அதனை ஆமோதித்தன. ஆனால், ஜனநாயக அரசாங்கம் அப்படி ஒருபோதும் செய்ய மாட்டாது என்று மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிய பெரிய எலியனார் கூறினர்.

"வீட்டுக்காரர் வைக்கும் அரிசி, நெல், மா, செத்தல் மிளகாய், தேங்காய், பாண், வாழைப்பழம், சீனி, சர்க்கரை ஆகியவற்றை இரவு பகலாகத் திருடித் தின்கிறோம்; அவர்களின் துணிமணிகளை வெட்டித் தள்ளுகிறோம்; வட்டுகளில் உள்ள இளநீர்க் குரும்பைகளை அறுத்துக் கொட்டிப் பெரியநட்டம் செய்கிறோம்; இரவிலே கூரைக்குக் கூரை, வளைக்குவளை, மேலும் கீழுமாக ஓயாமல் உறங்காமல் ஓடியோடிப் பெரும புரளிகள்செய்து அவர்கள் நித்திரை கொள்ளமுதலாய் விடாது பெருங்கொடுமை செய்கிறோம்; அவர்களும் ஆற்றாமல் பொறிவைத்துப் பார்க்கிறார்கள்; கள்ளப் பட்டுப் பிடிபடுகிறோ மில்லை; இனி என்னசெய்கிறது என்று பூனைகளை வளர்த்து எங்கள் கொட்டத்தை அடக்க உபாயம் தேடுகிறார்கள்; அதனால் அவர்களில் பிழை ஒன்றும் இல்லை; எங்களில்தான குற்றம் எல்லாம்; சரி இன்றுதொட்டு நீங்கள் வீடுகளில் யாதும் திருடுவதில்லை, ஒருஅழிநாடுஞ் செய்வதில்லை என்று உங்கள் கைகளைஉயர்த்தி வாக்குக் கொடுங்கள்; பூனைகள் இந்தஉலகிலேயே இல்லாமல் ஒழித்து விடுகிறேன்" என்று வீட்டெலி ஒன்று துள்ளிக் கொண்டு தலைவர் அமர்ந்திருந்த மேசை மீது பாய்ந்து வாலைஉயர்த்திக் கையைக் காட்டிப பெரிய அட்டகாசஞ் செய்தது. (தொடரும்)

இ. மே. யோ. தங்கராசா

## ஒருசிறு நன்மை

அளவெட்டியிலே ஒருசெழிப்பான வயலில் நெல் வளர்ந்து, மட்டம் வெடித்து, நிரம்பக் கதிர்கள் தள்ளியிருந்தது. அந்தநெற்கதிர்கள் பொன்நிறம் பொருந்தியிருந்தன. அப்பொழுது வீசிய இளந்தென்றலில் அசைந்து ஆடிக்கொண்டிருந்தன. முளைத்துக் கதிர்தள்ளிக் கடவுளுடைய ஏற்பாட்டை நிறைவேற்றுவது சந்தோஷம் என்று காட்டின.

சருவேசுரன் மோட்சத்திலிருந்து அவைகளைப் பார்த்துச் சந்தோஷப்பட்டார். "இந்த வயலைப்போல் எல்லாச் சிருட்டிகளும் இருக்க வேண்டும்" என்றார்.

அவ்விடத்தில் ஒருநெற்கதிர் மற்றவைகளைவிட அதிகம் ஆனந்தமாய் ஆடியது. "கதிரே! நீ மிகவும் சந்தோஷமாய் இருக்கிறாயா?" என்று சருவேசுரன் கேட்டார்.

"ஆம், கர்த்தாவே! மெத்தச் சந்தோஷமாய் இருக்கிறேன்" என்றது அந்த நெற்கதிர்.

"நமக்கும் சந்தோஷம்; சரி, நாம் சொல்வதைச் செய்வாயா?

"எதற்கும் தயார்."

"சரி! சூரிய வெளிச்சத்தை நன்றாய்க் குடித்து, உன்னில் சாவி சப்பட்டை இல்லாமல் எல்லாவற்றையும் நல்ல மணியாக்கி விடு."

"[illegible]தைச் செய்கிறேன் ஆண்ட[illegible]"

அப்படியே அந்தநெற்கதிர் வெயிலை நன்றாய்க்குடித்து நெல்மணிநிறைந்து, பாரந்தாங்க முடியாமல் தலைசாய்ந்து நின்றது. வயற்காரன் வந்து நெல்லை வெட்டி வீட்டிற்குக் கொண்டுபோய்க் கூடைக்குள் போட்டு வைத்தான்.

* * *

சுன்னாகத்தில் இருந்த நெல்வியாபாரி வயற்காரனிடம் போய் நெல்லை விலைக்கு வாங்கினான். வியாபாரி மிகவும் கஷ்டப்பட்டு உழைக்கிறவன். கமக்காரன் நெல்லை அளக்கும் பொழுது யோசிப்பான்: "இந்த வியாபாரி ஏழை; மிகவும் பாடுபடவேண்டியிருக்கிறது; இம்முறை நட்டப்பட்டுப் போனான்; எனக்கு இம்முறை நல்ல விளைவு; கொஞ்சங் கூடஅளந்து போடுவோம்" என்றுசொல்லி ஒன்றரைப் புசல் கூடக் கொடுத்தான்.

* * *

வியாபாரி நெல்லைக்குற்றி அரிசியாக்கினான். இவன் தோலகட்டி ஆச்சிரமதாருக்கு அரிசிவிற்கும் வாடிக்கைகாரன். வழமைபோல் தேவசகாயம் விரத்தர் அரிசி வாங்குவதற்காகக் கடைக்குச்சென்றார். அவரிடம் காசு அதிகம் இருக்கவில்லை. அவருடைய பரும்படியான உடுப்பும் கிழிந்து தைத்து இருந்தது. "இவர்களுடைய சீவியம் கஷ்டமானது; அளவெட்டியான் தந்தநெல்லு நன்றாய் அரிசி பெரலியச் செய்தது; ஆகையால், விரத்தருக்கு அரிசி கொஞ்சங் கூடக்கொடுப்போம்" என்றுசொல்லி, விரத்தர் வேறு அலுவலாய் இருந்தநேரம் பார்த்து எட்டுக்கொத்து கூட அளந்து விட்டான்.

* * *

தோலகட்டி ஆச்சிரமத்துக் கணக்கர் அளவு நிறையில் நிபுணர். கட்டளைப்படி போசனத்துக்கு வேண்டியதை அளவாய்க் கொடுப்பார். சிக்கனமாகத்தான் சீவிக்க வேண்டியிருந்தது. ஆனால், சாக்கில் அரிசி கூட விருந்தபடியால் மத்தியானம் சகோதரர் நன்றாய்ச் சாப்பிடும்படி சோறு கூடச் சமைத்தார்.

சாப்பாடு கொஞ்சங் கூடஉண்டபடியால் நவசந்நியாசத்தில் இருந்த அன்செல்மு யோசித்தார்: "இன்று கூடச் சாப்பிட்ட படியால் கொஞ்சங் கூட வேலையுஞ்செய்து, முழுச் செபமாலையையும் கைவிரித்துச் சொல்லுவேன்." சயனிப்பதற்குமுன் சிலுவைப்பாதையுஞ் செய்தார். "ஆண்டவரே! இவ்வளவுதைரியந் தந்ததற்காக உமக்கு நன்றி; நான் இன்றுசெய்த அதிகப்படியான வேலையையும், சிலுவைப் பாதையையும் ஒருஆத்துமத்துக்காக ஒப்புக் கொடுக்கிறேன்" என்று சொல்லி நித்திரைசெய்தார்.

* * *

அந்நேரம் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் ஒருவன் சாகுந்தறுவாயில் இருந்தான். தனது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட வேண்டுமென்று அறிந்தும் அவனுடைய அகங்காரம் இடந்தாவில்லை. பிறகு என்ன காரணத்தாலோ தெரியாது திடீரென, "ஆண்டவரே! என்பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டு, நல்லகொம்பிசம்பண்ண எனக்கு வரந்தாரும்" என்று மன்றாடினான்.

ஆச்சிரமத்துறவியின் மன்றாட்டைக் கேட்டு, பாவியின் மனதை இளகச் செய்தார் சருவேசுரன். அவன் நல்லபாவசங்கீர்த்தனஞ் செய்து அவஸ்தையும் பெற்றான். அவனுடைய ஆத்துமம் இரட்சிக்கப்பட்டது.

மணிகள் நிறைந்த நெற்கதிரால் வயற்காரன் அதிகநெல் வெட்டினான். வியாபாரிக்கு அரிசி பொலிந்தது. ஆச்சிரமச் சகோதரருக்குக் கூடிய அரிசி கிடைத்தது. விரத்தர்மார் அதிகந் திருப்தியாய்ச் சாப்பிட்டார்கள். நவசந்நியாசி அன்செல்மு அதிக வேலை செய்து, சிலுவைப் பாதையுஞ் செய்தார். அவருடைய செபம் ஒருஆத்துமத்தை இரட்சித்தது.

ஒருசிறு நன்மை பெருகி அற்புதங்களைச் செய்யவல்லது.

— சுகுணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

சென்ற செவ்வாய்க்கிழமை இரவு முதல் அதிகமான மழைக்கோலமும், மப்புமந்தாரமும் காணப்படுகின்றன. தூற்றல் அல்லாது இன்னும் மழையில்லை. யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல, கிளிநொச்சியிலும் மழை பெய்யாததாலும், குளத்திற் போதிய தண்ணீர் இல்லாததாலும் விதைப்புத் தடைப்பட்டிருக்கிறது.

### பாப்பரசர் சுகம்பெற்றர்

சமீபத்திலே தமக்குண்டான நோயிலிருந்து பரிசுத்த பாப்பரசர் பூரணமாகக் குணமடைந்து விட்டாரென அவரது வேனிற்காலமாளிகை அமைந்துள்ள காஸ்தெல் கான்டல்போவில் தெரியவந்திருப்பதாகச் சென்றவியாழக்கிழமை தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது.

### நெல்லின் உத்தரவாதவிலை

நெல்வேளாண்மைசெய்யும் கமக்காரருக்கு ஊக்கமளிக்கும் நோக்கமாகத் தற்போது ஒருபுசல்நெல்லுக்குக் கொடுபட்டுவரும் 12ரூபா உத்தரவாத விலையை மேலும் ஐந்துவருடங்களுக்கு நீடிக்கச்செய்வதென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. அரிசிநிலைமை வரவரத் திருப்திகரமாக விருத்தியடைந்து வருவதால் முன்போலத் தங்கள்நெல் வேளாண்மை முயற்சிக்கு வருமானங் கிடையாதெனநினைத்து ஏங்கிக்கொண்டிருந்த கமக்காரரின் அச்சத்தைநீக்கும்படி இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

### ஆடுகளுக்குத் தொற்றுநோய்

சென்றஆவணி, புரட்டாசிமாதங்களிலே ஊர்காவற்றுறையில் 122செம்மறியாடுகளும், 105வெள்ளாடுகளும் இறக்குமதிசெய்யப்பெற்று அங்குள்ள 'குவாறன்ரைன்' நிலையத்தில் வைக்கப்படலாயின. இவைகள் தென்னிந்தியாவிலிருந்து இங்குள்ள ஓர்இறக்குமதியாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டன. இவைகள்வந்துசேர்ந்த பத்துநாட்களுள் ஐந்துசெம்மறியாடுகள் இறந்தன. பின்னர்இதுவரை 61ஆடுகள் இறந்துபோயின. ஏனையஆடுகளுக்கு ஊசிமருந்து செலுத்தப்பட்டிருக்கிறது.

### கட்டிச்சீனி பறிமுதலாயிற்று

வெள்ளைச்சீனி தயாரிப்பதற்கென்று வியாபாரிகள்சிலரால் சட்டவிரோதமாக இறக்குமதிசெய்யப்பெற்ற சுமார் பத்துலட்சம்ரூபா பெறுமதியுள்ள 16,000 அந்தர் கட்டிச்சீனி விலைக்கட்டுப்பாட்டுஅதிகாரிகளால் கண்டுபிடித்துப் பறிமுதல்செய்யப் பட்டிருக்கிறது. இந்தக்கட்டிச்சீனி சுத்தமாக்கப்பட்டபின் ஓர்சிறந்தஇனமான வெள்ளைச்சீனியாகிவிடும். கட்டிச்சீனியைச் சுத்தமாக்கி வெள்ளைச்சீனியாக மாற்றும்பொருட்டு அந்தவியாபாரிகள் புறக்கோட்டையிலே, ஓரிடத்தில் விசேஷயந்திரங்கள் வைத்திருப்பதும் கண்டுபிடிக்கப்பட் டிருக்கிறது.

### அணைக்கட்டுவேலை ஆரம்பம்

காம்பனுக்கும், சுருவிலுக்கு மிடையேயுள்ள குறுக்குக்கடல் அணைக்கட்டுவேலை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. இந்தக்கடலின் உப்புநீரைத் தடைசெய்து அணைகட்டுவதினால் 500 ஏக்கருக்கு மேற்பட்டநிலம் நெல்விளையும் நிலமாகமாறுமென எதிர்பார்க்கப்படுகிறது. அன்றியும் ஓர்பெரிய நன்னீர்த்தேக்கமும் இந்த அணைக்கட்டால் ஏற்படவிருக்கிறது. இந்தப்பெரும் நன்னீர்த்தேக்கத்தினால் கடுங் கோடையான காலத்தில் நன்னீர்இல்லாமல் கஷ்டப்படும் அயற்கிராமவாசிகளுக்குத் தண்ணீர்த்தட்டுப்பாடு இராதென்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

### புதிய மீன்பிடிமுறை

சலாபத்தைச்சேர்ந்த முகாந்திரம் ஜெறேமியாஸ் பெர்னண்டோ அவர்கள் தமதுசெலவிலே மலாயாவுக்குச் சென்று இலங்கையிலும் நடத்தத்தகுந்தனவாய் அந்நாட்டிலே நடைமுறையில் இருந்துவருகின்ற மீன்பிடித்தொழில்முறைகளைப் படித்துவந்திருக்கின்றார். அந்தமுறைகளைமேற்கொண்டு சலாபத்தைச்சேர்ந்த மாறுவில்வாசி ஒருவரால் இம்மாசத்தில் புதுமாதிரி மீன்பிடித்தொழில்ஒன்று தொடக்கப்படவிருக்கிறது. இத்தொழிலுக்கென்று அங்குதானே 6,300ரூபா செலவில்கட்டப்பட்டுவரும் மூன்று பெரியபடகுகளும், மலாய்நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டவலைகளும் உபயோகிக்கப்படவிருக்கின்றன. இப்புதியதொழிலை வர்த்தக-கடற்தொழில் மந்திரியாரான திரு. ஷெர்லி கோறியா அவர்கள் ஆரம்பித்துவைப்பார். படகுகளும், வலைகளும் சலாபமேற்றிராணியாரான மகாவந். எட்மன்ட் பீரிஸ் ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்படவிருக்கின்றன.

### பேராசிரியரின் வேதுமானம்

1921-ம்ஆண்டு ஐப்பசிமாதமுதல் இலங்கைச்சர்வகலாசாலைக் கல்லூரியில் கணிதசாஸ்திர பேராசிரியராயிருந்தவரும், பின்னர் இலங்கைச் சர்வகலாசாலையிலே 1949-ம்ஆண்டு தாம்இளைப்பாறுகிறவரை கணிதசாஸ்திர தலைமைப்பீடம் தாங்கியிருந்தருமான பேராசிரியர் எவ் எச். வி. குலசேகரம்அவர்கள் கணிதசாஸ்திர சம்பந்தமான புத்தகங்கள், சஞ்சிகைகளைக்கொண்ட தமதுநூல்நிலையம்முழுவதையும் சர்வகலாசாலைநூல்நிலையத்துக்கு அன்பளிப்புச் செய்திருக்கின்றார். சர்வகலாசாலைச்சபையும் இந்தநன்கொடையை மனப்பூர்வமாகக் கையேற்றிருக்கிறது.

### இலவச பஸ்பிரயாணம்

பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவலஅவர்கள் சென்றவாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்தபோது, பிரயாணிகள் சலார்கொடாமலே ஏறிச்செல்வதற்குப் பருத்தித்துறை—யாழ்ப்பாணம் பஸ்கம்பெனி ஏழுபஸ்களை விட்டுக்கொடுக்கலாயிற்று. இந்தப்பஸ்கள் அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், நீர்வேலி, கரவெட்டி, நெல்லியடி, வல்வெட்டித்துறை ஆகியகிராமங்களில் இருந்து பிரயாணிகளை இலவசமாக யாழ்ப்பாணத்துக்கு ஏற்றிவரலாயின. பின்னர்இவர்கள் அவற்றிலே திரும்பவும் தங்கள்ஊர்போய்ச் சேர்ந்தார்கள். ஏனையபஸ்களும் கிரமமாகப் பிரயாண சேவை நடத்தலாயின.

### கலவையில் நச்சுத்திராவகம்

நாவாந்துறைவாசியான 30 வயதுடைய பாலன் வைரமுத்துஎன்பவர் நோய்கண்டு வைத்தியசிகிச்சைபெறுவதற்காக யாழ்ப்பாண அரசினர்பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். ஆஸ்பத்திரி டக்றர் எழுதிக்கொடுத்த மருந்துத்துண்டுக்குக் கலவைஒன்று தயாரித்து அந்தநோயாளிக்குக் கொடுக்கப்பட்டது. மருந்துகுடித்த சிறிதுவேளையால் அவருக்கு வலிப்புஏற்பட்டுப்பின்னர் அவர் இறந்துபோயினர். போத்தலில் எஞ்சியிருந்தகலவையை ஆஸ்பத்திரிஅதிகாரிகள் சோதித்தபோது, 'காபொலிக்' திராவகநாற்றம் அதிலிருந்துவரக் கண்டறியப்பட்டது. பிந்தநோயாளியின் வயிறுகழுவப்பட்டது. ஆயினும்சிறிதுவேளையால் அவர் இறந்துபோயினர்.

### ஏழைகளின் இரத்ததானம்

இரத்ததானம் செய்வதற்கென்று ஏழைமக்கள்மாத்திரம் கொழும்பிலுள்ள அரசினர் பெரியஆஸ்பத்திரிக்குச் செல்வதாக அறிவிக்கப்படுகிறது. இவர்களும் இரத்ததானஞ் செய்யக்கூடிய நிலையிலில்லையாம். இவர்களிலும் அநேகர் பத்து[illegible]றுக்கொள்வதற்கே தங்கள்இரத்தத்தை விற்கிறார்களென்று சொல்லவேண்டுமாம். நடுத்தரவகுப்பினரும், அதிகவருமானமுடையமேல்வகுப்பினரும் இரத்ததானஞ்செய்யக் கொழும்புப் பெரியஆஸ்பத்திரிக்குச் செல்வதேயில்லை. ஓர்சிவில்உத்தியோகஸ்தரோ, ஓர்டக்றரோ, ஓர்வழக்கறிஞரோ, ஓர் பெரிய வர்த்தகரோ இரத்ததானஞ் செய்ய இதுவரைஅங்கு சென்றதேயில்லை.

### புதிய வயோதிகர்சாலை

கைதடியிலே சுமார்பத்துலட்சம் ரூபாசெலவில் அமைக்கப்பட்டுள்ள புதியவயோதிகர்சாலையைப் பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவலஅவர்கள் இம்மாதம்15-ந்திகதி வெள்ளிக்கிழமை திறந்துவைக்கவிருக்கின்றார். இது 240 பேருக்குப்போதிய இடவசதியுடையதாயினும் தற்போதுஇதில் 24வயோதிகர்களே சஞ்சரித்துவருகிறார்கள்.

---

## இல்ல ஊர்வலம்

மரியாயின் மங்களவருடத்தைக் கொண்டாடுமுகமாகப் போளவத்தை விசாரணைப்பங்கிலே மாசில்லாத அன்னையின் திருச்சுரூபம் இல்லங்கள்தோறும் ஊர்வலமாகிறது. இங்குள்ள கத்தோலிக்க குடும்பங்களில் செல்வர், வறிஞரென்ற பேதமின்றி ஒவ்வோர்இல்லத்துக்கும் மாதாவின்சுரூபம் கொண்டு செல்லப்படுகிறது. ஒவ்வோர்வீட்டுமக்களும் மாதாவை வரவேற்றுச் செபமாலை செபித்து, ஞானக்கீர்த்தனைகள் பாடிக் காணிக்கை ஒப்புக்கொடுக்கிறார்கள். மாதாசுரூபம் ஓர்வீட்டில் மாலை 6-30மணிக்குக் கொண்டுசெல்லப்பட்டுப் பின்னர் அங்கிருந்து மறுநாள் மாலை 6-30மணிக்கு மறுவீட்டிற்குக் கொண்டுபோகப் படுகிறது. அமலோற்பவ அன்னையை வரவேற்கும் குடும்பமக்கள்சகலரும் பாவசங்கீர்த்தனஞ்செய்து, தேவநற்கருணைபெற்று, மாதாவை மகிமைப்படுத்துகிறார்கள். அதனால் நெடுங்காலம் பாவசங்கீர்த்தனம் செய்யாதவர்கள்முதலாய்ப் பாவசங்கீர்த்தனஞ் செய்கிறார்கள். தேவஅன்னையின் திருப்பாதத்திலே சாஷ்டாங்கமாகவிழுந்து தங்கள்குடும்பங்களை மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கிறார்கள். சிலுவையடியில் தாய்பெற்றமாதாவைத் தஞ்சமென ஏற்கிறார்கள். சமாதானத்தின் இராக்கினி போளவத்தை மக்களுக்குச் சமாதானத்தை அருளுகிறா. வாழ்க அமலஉற்பவி!

—பே. த. தவரேரா

---

● போலாந்தின் கம்யூனிஸ்தஅரசாங்கம் அங்கு சிசெசின்மாகாணத்திலே இரண்டாவதான "பிள்ளைகளின்பட்டினம்"ஒன்றைத் திறந்திருக்கின்றது. இதிலே இளம்பிள்ளைகள் சேர்க்கப்பட்டு, மாக்ஸியகொள்கைகள் பயிற்றப்படுவார்கள். 'டார்லோவெக்' எனப்பெயர்கொண்ட இதிலே தொழிலாளர்வகுப்புக் குடும்பங்களைச்சேர்ந்த 800 பிள்ளைகள் சேர்க்கப்படுவார்கள்.

● இந்தியபிரதமர் பண்டிதநேரு அவர்கள் தமதுபிரதமர்பதவியை இராசினாமாச்செய்துவிட்டு அப்பதவியிலே பம்பாய் முதன்மந்திரியாரான திரு. மோரார்ஜி தேசாய்அவர்களை அமர்த்துவாரென்றும், இந்தியகாங்கிரஸ் அக்கிராசனராகமாத்திரம் அவர் பதவிவகித்திருந்து காங்கிரஸ்கட்சியைப்பலப்படுத்துவாரென்றும் தெரியவருகிறது. காங்கிரஸில் இந்துக்களின் வைதிக மனப்பான்மை தலையெடுத்திருப்பதால் அதனைஅடக்கவே பண்டிதர்நேரு உத்தேசித்திருக்கிறாரென்று சொல்லப்படுகிறது.

## குடும்பங்களைப் பாது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விருப்பமான முயற்சி!! குடும்பசெபமாலை குடும்பத்துஅங்கத்தவர்கள் இருதயங்களை ஒன்றாய் இணைக்கின்றது. சமுகமாயிராதவர்களையும், மரித்துப் போனவர்களையும் ஒன்றுசேர்க்கின்றது. இனிய அன்பால் குடும்பத்தினர் அனைவரையும் தேவகன்னியின் — தாயின் இருதயத்துடன் பந்திக்கின்றது."

---

## நம்பிக்கை நாயகி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞெருநாட்களுக்குப்பின் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்கள். யுத்தம் முடிந்தது.

1871-ம்ஆண்டு தை 17-ம் நாள் அன்று இரவில் லவாலுக்கு வெளியே இருந்த ஜேர்மன் வீரர்கள், "தேவதாயார் இந்நாட்டுக்குக் காவல்புரிகிறார். நாம் முன்னேறுவதைத் தடுக்கிறார்" என்று பேசிக்கொண்டார்கள் என்னும் செய்தி வெகுசீக்கிரம் அப்பக்கமெங்கும் பரவியது. மாதா ஆகாயத்தில் மறைந்த அதே தருணத்தில் தளபதி கையில் கடிதம் கிடைத்தது என்று பின்னர் அறிந்தனர். போன்மேண் நாயகியே தங்கள் நாட்டைக் காப்பாற்றியதாகப் பிரான்ஸின் மக்கள் கூறுகிறார்கள். நிலைமை எவ்வளவு மோசமாயிருந்தபோதிலும் பரலோக இராக்கினியை நோக்கி, விடாது பிரமாணிக்கமாய் உருக்கத்துடன் செபித்தால், மிகப்பெரிய புதுமையும் நடைபெறும்" என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

இந்தக் காட்சி உண்மையானதாவென்று விசாரணை நடந்தது. நெடுநாட்களுக்குப்பின் மேற்றிராணியார் உண்மையென அதை அங்கீகரித்து, "போன்மேனில் காட்சியளித்த நம்பிக்கையின் நாயகி" என்று அன்னையை அழைக்க அனுமதியளித்தார்.

செசார் பார்பதெத் என்பவரின் இல்லிடம் கோவிலாக்கப்பட்டது. அங்கு பல அதிசயங்கள் நடைபெற்றன. யுஜீன் மேற்றிராசன குருவாகி,1927-இல் இறந்தார். யோசேப்பு மரியாயின் ஊழியர் சபைக் குருவாகி 1930-இல் மரித்தார். ஜோன் மரி லெபோஸ் திருக்குடும்பசபைக் கன்னியாஸ்திரீயாகி 1933-இல் மரித்தாள்.

---

## 1-ம் வருட மரண ஞாபகம்

"சீவியகாலத்தில் இவரை நாம் நேசித்தோம். நம்முடையசெபங்களால் கர்த்தரின்வீட்டுக்குள் இவரை நாம் இட்டுச்செல்லும்வரை கைவிடாதிருப்போமாக"

எனதுபத்தினியும் எங்கள் அருமைத்தாயுமாகிய அந்தோனியாப்பிள்ளை மரணத்திரையில்மறைந்த முதலாம்வருடம் 10-10-54ல்பூர்த்தியாகிறது. இவவுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி அனைவரையும் வேண்டுகின்றோம். இவவுடையஆத்துமம் சமாதானத்தில் இளைப்பாறுவதாக.

பி. நீக்கிலாப்பிள்ளையும் மக்களும்

பாண்டியந்தாழ்வு

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 7-1954.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org